மாநகர ... யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 13 வெள்ளிக்கிழமை (25.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 151

# இழப்புக்கள் ஏற்பட்டாலும் படை நடவடிக்கை தொடரும்


## முகமாலைத் தாக்குதல்; இராணுவத்தின் செயற்பாடு மதிப்பீடு செய்யப்படும் என்கின்றார் கெஹலிய

கொழும்பு,ஏப்ரல் 25

முகமாலை, கிளாலி, கண்டல் பகுதிகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பெரும் சமரில், படைத் தரப்புக்கு இழப்புகள் ஏற்பட்டபோதிலும் படை நடவடிக்கைகள் தொடரும்.

வழமையாக நடைபெறுவது போன்று, இராணுவம் தனது படையினரின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும். தேவைப்பட்டால் அவர்களுக்குத் தண்டனை கூட வழங்கப்படலாம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.



தேசிய ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் மேலும் கூறியவை வருமாறு:-

வழமையாக நடைபெறுவது போன்று இராணுவம் தனது படையினரின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும். தண்டனைகள் கூட வழங்கப்படலாம். இந்த மோதல் பாரிய தோல்வியல்ல.

ஒப்பீட்டு நோக்கில் இதனைப் பாரிய பின்னடைவாகவோ அல்லது தோல்வியாகவோ காட்ட முனைந்தால் அதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் மீண்டும் கிளைமோர்த் தாக்குதல்

வவுனியா, ஏப். 25

மன்னார், வெள்ளாங்குளம் - கல்விளாங்குளம் பகுதியில் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நேற்றுக் காலை 7 மணியளவில் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் படுகாயமடைந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 28 சடலங்கள் நேற்று செஞ்சிலுவையிடம் கையளிப்பு

கிளிநொச்சி,ஏப்.25

முகமாலை, கிளாலியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட 28 படையினரின் சடலங்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலைச் சமரில் உயிரிழந்த படையினர் எண்ணிக்கை 175ஐ தாண்டிவிட்டது?

கொழும்பு, ஏப்ரல் 27

கிளாலி முதல் முகமாலை வரையான முன்னரங்கப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த சமரில் பலியான இராணுவத்தினரின் எண்ணிக்கை 176ஆக அதிகரித்துள்ளது என இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 76 சடலங்களும், பத்தரமுல்ல மலர்ச்சாலையில் 37 சடலங்களும், மாதம்பே மலர்ச்சாலையில் 30 சடலங்களுமாக மொத்தம் 143 சடலங்கள் மூன்று மலர்ச்சாலைகளுக்கும் கொண்டுவரப்பட்டுள்ளன என அந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டோரின் சடலங்களை மீண்டும் படையினரிடம் ஒப்படைப்பதற்கு தாங்கள் தயாராகியிருக்கின்றபோதிலும் சடலங்களுக்கு அணிவிக்கும் சீருடைகள் கிடைக்காததால் அந்தச் சடலங்களை தொடர்ந்தும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனா வைத்தியசாலையில் சிதைந்த நிலையில் 6 சடலங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.25

கொடிகாமம் பொலீஸாரால் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஆறு பேரின் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இனங்காணப்படாத நிலையில் இந்தச் சடலங்கள் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சடலங்கள் சிதைந்த நிலையில் உள்ளதாகவும் அவற்றில் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முகமாலைப் பகுதியில் இருந்து படையினரால் மீட்கப்பட்ட சடலங்களே கொடிகாமம் பொலீஸார் ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நேற்று பிற்பகல் வரை சடலங்கள் எவையும் இனங்காணப்படவில்லை.

இச்சடலங்களில் மூன்று சடலங்கள் ஆண்களுடையவை என்றும் மூன்று சடலங்கள் பெண்களுடையவை என்றும் அறியப்படுகிறது.

(அ-86-15-207)

## மன்னாரில் நேற்று இருமுனை நகர்வுகள் முறியடிக்கப்பட்டதாக புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி, ஏப் 25

மன்னாரில், நேற்று இரு இடங்களில் படையினர் மேற்கொண்ட முன்நகர்வுகளை தாம் முறியடித்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரம், சேத்துக்குளம் பகுதியில் இருந்து வேட்டையா முறிப்புக்குளம் நோக்கி அதிகாலை 5.45 மணிக்கும்-

பாலைக்குழிப்பகுதியில் இருந்து அடம்பன் நோக்கி பி.ப 2.30 மணிக்கும்-

படையினர் முன்நகர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும்-

முன்னேறிய படையினரை வழிமறித்துத் தாக்கி அவர்களை பழைய நிலைகளுக்கு திருப்பி அனுப்பியதாகவும்- புலிகள் நேற்று இரவு அறிவித்தனர்.

வேட்டையா முறிப்புக் குளத் தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டனர், 30 படையினர் காயமடைந்தனர், போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார், கவசவாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டது - என்றும் புலிகளின் தரப்பில் அறிவிக்கப்பட்டது-

பாலைக்குழிப் பகுதித் தாக்குதலிலும் கவசவாகனம் சேத மாக்கப்பட்டது எனவும் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

(அ-1)

## துரையப்பா விளையாட்டரங்கு நாளை மக்கள் பாவனைக்குத் திறக்கப்படும்

### புத்தாண்டுச் சந்தை, கலைநிகழ்வுகளுடன்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கை மக்களின் பாவனைக்கு திறந்து விடும் ஆரம்ப நிகழ்வும் புத்தாண்டுச் சந்தை மற்றும் கலை நிகழ்வு, உதைப்பந்தாட்டப் போட்டி ஆகியனவும் நாளை சனிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை கோலாகலமாக இடம்பெறவுள்ளன.

யாழ் மாநகர சபை,யாழ். வர்த்தக சம் மேளனம், யாழ் மாவட்டச் செயலகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்தும் இந்நிகழ்வு நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்ப மாகி நடைபெறவுள்ளது.

அன்றை தினம் ஆரம்ப நிகழ்வாக இணுவில் உதயநாதன் குழுவினரின் நாதஸ்வரக்கச்சேரி நடைபெறும். தொடர்ந்து திருமறைக்கலாமன்றத்தினரின் கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

பிற்பகல் 3.00 மணிக்கு காட்சி உதைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்காக வேவு பார்த்தாராம்; வெள்ளவத்தையில் பெண் கைது

கொழும்பு, ஏப்ரல் 25

கொழும்பு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் வேவு பார்த்து அது பற்றிய தகவல்களைப் புலிகளுக்கு வழங்கினார் எனக் கூறப்படும் தமிழ்ப்பெண் ஒருவரை வெள்ளவத்தைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வெள்ளவத்தை பெர்னாண்டோ வீதியில் சிங்களவர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த வேளையிலேயே இப் பெண்ணைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 வயதான பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். வெள்ளவத்தையில் அவர் நீண்ட காலமாகத் தங்கியிருந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அவரது அன்றாட நடவடிக்கைகள் மற்றும் பணத்தைத் தாராளமாகச் செலவிடும் போக்கு என்பனவற்றை நீண்ட காலமாகக் கண்காணித்தே அவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(சி)

## அரிசி இறக்குமதியை துரிதப்படுத்த முடிவு

### இந்தியாவில் இருந்தும் மியான்மாரிலிருந்தும் வரும்

கொழும்பு, ஏப்.25

சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாக அரிசி இறக்குமதியைத் துரிதப்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.இதன்படி இந்தியாவிலிருந்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியையும், மியன்மாரில் இருந்து ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசியையும் இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அறியவருகிறது.

அரிசி இறக்குமதியை மேற்கொள்வதினால் அரிசி ஆலை உரிமையாளர்கள் மொத்த விற்பனைக்காக அரிசியைப் பதுக்கி வைக்க முடியாத நிலை ஏற்படும் என்று அமைச்சரவை கருதுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி துரித கதியில் அரிசி இறக்குமதியை மேற்கொண்டு சந்தையில் விநியோகிக்க அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.(சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Calling for Tender - Teaching Hospital. Jaffna.

### Painting to Operation Theatre

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for PAINTING TO OPERATION THEATRE. TH, Jaffna up to 1 O.OOam on 09.05.2008 Tender form may be collected from Director, TH, Jaffna up to 02.05.2008 on payment of non refundable deposit of Rs.2,500/-

02. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.

03. Tender forms are issued only to contractor who has valid registration in Grade M9 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04. Sealed Tender may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 09.05.2008,

05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, TH, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.** (C/552553)


## கண்ணீர் அஞ்சலி

*எமது சபையின் ஆயுள்கால உறுப்பினரும்*
*சபையின் சகல செயற்பாடுகளிலும்*
*முன்னின்று உழைத்தவருமாகிய*

## சுப்பிரமணியம் சோதிலிங்கம்

**அவர்கள் இந்தியாவில் யாத்திரை மேற்கொள்ளும்போது மரணமடைந்த செய்தி கேட்டு சபையினர் அதிர்ச்சியடைந்துள்ளோம். அவரின் மீட்க முடியாத இழப்பினால் வருந்தும் குடும்பத்தினருடன் எமது சபையினது கண்ணீரையும் காணிக்கையாக்குகின்றோம். அவரது இழப்பினால் வருந்தும் குடும்பத்தினருக்கு அம்பாள் ஆறுதலளிக்க வேண்டுமென வேண்டுவதோடு அன்னாரது ஆன்மா மீண்டும் பிறவா அருள் பெற்று சாந்தியடைய வேண்டுமென எல்லாம் வல்ல நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றோம்.**

*நயினாதீவு அமுத சுரபி அன்னதான சபையினர்.*
(73499)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா தங்கம்மா



சரவணை கிழக்கு, வேலணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தங்கம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், நல்லையா, மனோன்மணி, காலஞ்சென்றவர்களான பூமணி, இரத்தினமணி, இராசதுரை, பரமலிங்கம், குகதாஸ், இராசலிங்கம் மற்றும் சிவமணி, சிங்கராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அன்னாரின் சரவணை மேற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக சரவணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சரவணை மேற்கு,*
*வேலணை.* (73551)
தகவல்:
மகன் (குட்டி மாமா)

### சுப்பர் கணவதிப்பிள்ளை (சுகணா)



'அண்ணா இல்லம்', அல்வாயைச் சேர்ந்த சு.கணவதிப்பிள்ளை (சுகணா-ஓய்வு பெற்ற அதிபர்) நேற்று (24.04.2008) வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னார் சுப்பர் - தெய்வானையின் மகனும், கதிராசிப்பிள்ளையின் கணவனும், நாகலிங்கம் - பார்வதிப்பிள்ளையின் மருமகனும், தமிழழகன் (லண்டன்), பூங்கோதை (நோர்வே), தமிழ்மலர் (நோர்வே), மணிமேகலை (கனடா), கனிமொழி (லண்டன்), கணேசானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி, சச்சிதானந்தம், பாஸ்கரன், செல்வரட்ணம், நடேஸ்வரன், மலர்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமனும், அமரத்துவமடைந்த வள்ளிப்பிள்ளை, பசுபதி, தினகரிப்பிள்ளை, கந்தவனம், தங்கம்மா ஆகியோரின் உடன் பிறப்புமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"அண்ணா இல்லம்",*
*அல்வாய்.* (சி/55255)
தகவல்:
குடும்பத்தினர்

## அனலைதீவுக் கடற்பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

அனலைதீவுக் கடற்பகுதியில் சிதைந்த நிலையில் 35 வயது மதிக்கப்படும் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று நண்பகல் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி. ஜோய் மகாதேவன் சடலத்தை அது காணப்பட்ட இடத்தில் பார்வையிட்டார்.

அந்தப் பிரதேச இளைஞர்களின் உதவியுடன் சடலத்தை ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்த நீதிவான் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். (அ-1)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி,ஏப்.25

பருத்தித்துறை கற்கோவளம் பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமிகோவில் மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

தம்புருவளை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் பிரதமகுரு சிவாசாரிய ஞானபானு சிவஸ்ரீ ல.வே.தியானந்தராசாக்குருக்கள் பிரதம குருவாக இருத்து பிரதிஷ்டா கும்பாபிஷகத்தை நடத்திவைப்பார். (1-236)

## கொக்குவிலில் சாரணப்பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.25

சாரணர் அணித்தலைவர், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான பயிற்சி நெறி நாளை முதல் இரு நாள்கள் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

''தரமான சாரணியத்தின் மூலம் நல்லதொரு சமூதாயத்தை உருவாக்குவோம்'' என்பதை இலக்காகக் கொண்டு சிறந்த சாரண அணித்தலைவர்களை உருவாக்கும் வகையில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (1)

## முஸ்லீம் வர்த்தகர் கொழும்பில் கடத்தல்

கொழும்பு, ஏப். 25

கொழும்பு, மூன்றாம் குறுக்குத் தெருவில் வைத்து வர்த்தகரான முஹம்மட் சலீம் என்பவர் கடந்த 22 ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட இந்த வர்த்தகர் தொடர்பாக எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி பகல் வேளையில் குறித்த வர்த்தக நிலையத்திற்கு வந்த இனந்தெரியாதோர் வர்த்தகரான முஹம்மட் சலீமை கடத்திச் சென்றபின்னர் தம்மிடம் 50 லட்சம் ரூபா கப்பம் கோரினர் என அவருடைய உறவினர்கள் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து எதுவித தகவலும் தமக்குக் கிடைக்கவில்லையெனவும் சந்தேகத்துக்கிடமான சில இடங்களில் சோதனை மேற்கொண்டதாகவும், இதனை பாதாள உலகக் கோஷ்டியொன்றே மேற்கொண்டிருக்கலாம் எனவும் கொழும்புக் கோட்டைப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளார். (சி)


**BARATHY**
சித்தன்கேணி
A/L 2010
கலை, வர்த்தகப்பிரிவுகள்
மீண்டும் புதிய பிரிவு நாளை ஆரம்பம்
26.04.2008 சனி
உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.
Note: பொருளியற் கல்லூரி ஆசிரியர்களுடன் மற்றும் பிரபல ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றார்கள்.

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்
A/L 2010
விவசாயம்
திரு.கஜேந்திரன்
ஆரம்பம் 27.04.2008 ஞாயிறு - 11.00 a.m
அனுமதிகளை முன் கூட்டி பெற்றுக் கொள்ளவும்.

**வேலையாள் தேவை (ஆண்)**
எமது நிறுவனத்தில் கடமையாற்ற ஆண் உதவியாளர் தேவை.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
நாளை (26.04.2008) சனி 2.00 P.M
பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சங்கரப்பிள்ளை இராசம்மா



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில், பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை இராசமம்ா (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/இணுவில் மத்திய கல்லூரி) நேற்று (24.04.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தையல்முத்து தம்பதிகளின் மூத்தமகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் சச்சிதானந்தபிள்ளை (சாயி பாமஸி, தாவடி), சந்திரகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்தி, சரோஜினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனகன், கோபிகா (கொழும்பு), கரன், துளசி, அபிலாஷ், மிதுனா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஆசிரியை) மற்றும் யோகேஸ்வரி, (லண்டன்), காலஞ்சென்ற சறோயினிதேவி மற்றும் தவமணி (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை மு.ப 11:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பாலாவோடை,*
*இணுவில் தெற்கு. இணுவில்* (73501)
தகவல்:
ச.சச்சிதானந்தபிள்ளை
(மகன்)

### திருமதி கனகாம்பிகை கார்த்திகேசு



மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகாம்பிகை கார்த்திகேசு நேற்று (24.04.2008) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் (பென்சனியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (முன்னாள் அரச அதிபர்), பத்மாவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், மகாதேவா (SPN கொம்பனி, கொழும்பு), திருக்கேசன் (இளைப்பாறிய ஊழியர், தபாற் திணைக்களம் யாழ்ப்பாணம்), ஜெகதீசன் (முன்னாள் ஊழியர், வைத்திலிங்கம் கொம்பனி), சோமசுந்தரம் (UK), திலகவதி (பிரான்ஸ்), புஸ்பவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகேஸ்வரி, கோபாலுப்பிள்ளை (லஷ்சுமி பிரஸ், கொழும்பு), இராஜகுலசூரியர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), செல்வராணி, ஞானேஸ்வரி, வீரவனிதா, ரட்ணலட்சுமி, லியோ அன்ரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாபரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கலாநிதி சிவகௌரி (ஆஸ்திரேலியா), கரிகரன் (ஆஸ்திரேலியா), டாக்டர் சிவராஜினி (ஆஸ்திரேலியா), வினோதினி (ஆசிரியை), ஈஸ்வரன் (ஆசிரியர்), ரேணுகா (கனடா), கஜரூபன் (கொமர்ஷல் வங்கி, யாழ்.), காயத்திரி, டயானி (கனடா) மஞ்சுளா (ஆசிரியை), கவிதா (UK), செரின் (பிரான்ஸ்), டிலானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2008) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மானிப்பாய் மேற்கு,*
*மானிப்பாய்.* (73500)
தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி நடராஜா தங்கரத்தினம்

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா தங்கரத்தினம் 23.04.2008 புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற சீனிவாசம் - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் அல்லிராணி, சுபத்திராதேவி (சுபா), ராஜசூரியன், ராஜபவா, சத்தியராணி, சத்தியபாமா, ராஜசிவா, ராஜசிறி, கல்யாணி(சுஜி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மரட் ணம், தர்சினி, அன்னலிங்கம், விவேகானந்தராஜா, ராஜநந்தினி, தட்சாயினி, சந்திரமோகன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கணேசம்மா, விநாயகராஜா, இரட்னேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணம் ஆகியோரின் சகோதரியும், அஜந்தன், துஜந்தன், அபர்ணா, அர்ச்சகா, துவாரகா, துளசிதரன், துர்க்கா, அபிராமி, குருபரன், சுபாங்கன், அனுசியா, மகிந்தன், பிறீத்தியா, ரிஷிகேஷன், பிரதுகேஷன், கிஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் ஏழாலை காடாகடம்பை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

ஏழாலை கிழக்கு. (சி/552557)
தகவல்:
பிள்ளைகள்

### சதீஸ்குமார் கபில்



மண்பிட்டி, நாவாந்துறையை வசிப்பிடமாக கொண்ட சதீஸ்குமார் கபில் நேற்று (24.04.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சதீஸ்குமாரின் மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பேரனும், தவராசா - நாகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை நல்லடக்கத்துக்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
தவராசா
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் ...
மாநகர ... யாழ்ப்பாணம்.





சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க 'கோப்சிற்றி' திறப்புவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள். யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதல் இரு படங்களிலும் இருவரும் இணைந்து 'கோப்சிற்றி'யைத் திறந்துவைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். விருந்தினர்கள் 'கோப்சிற்றி'யை பார்வையிடுவதை நான்காவது படத்தில் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

# 'கோப்சிற்றி' நிலையங்கள் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப் படுத்துவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## தென்மராட்சிப் பிரதேச செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம்.ஏப்.25

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் 'கோப்சிற்றி'கள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கப்பலில் கொண்டு வரும் பொருள்களை மட்டும் விற்பனை செய்யாமல் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கவேண்டும்.



இவ்வாறு சாவகச் சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப்சிற்றி' விற்பனைக்கூட திறப்பு விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையின் எந்தவொரு பகுதிக்குச் சென்றாலும் தனியார் நிறுவனங்களின் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் காட்சி அறைகள் போன்று பூட்சிற்றிக் கடைகளைக் காண முடியும்.

மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றினை மக்களுக்கு நிறைவான முறையில் சேவையாகச் செயலாற்றி வருகின்றன. இதனால் அப்பகுதி மக்களின் நன்மதிப்பினைப் பெற்ற வர்த்தக நிலையங்களாக அவை இயங்கி வருகின்றது.

அங்குள்ள பொருள்களின் தரம், பணியாற்றுவோரின் அன்பான உபசரிப்பு, பொருள்கள் வைத்திருக்கும் விதம் போன்றவை மக்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கும் யுக்தியாகக் காணப் படுகின்றது.

அங்குள்ள 'பூட்சிற்றி' விற்பனை நிலையங்கள் போன்ற வசதிகள் எமது பிரதேசத்தில் இல்லையெனினும் அங்குள்ளது போன்று சிறந்த செயலாற்றல்களை இங்குள்ள பணியாளர்கள் மேற்கொண்டால் கோப் சிற்றி விற்பன்ன நிலையங்களும் மக்களின் நன்மதிப்பினைப் பெற முடியும்.

கப்பல் வரவில்லையெனில் மாவட்டத்தில் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவும் இக் காலகட்டத்தில் இவ்வாறான கோப் சிற்றி விற்பனை நிலையங்கள் திறக்கப் படுவது வரவேற்கக் கூடியது.

மாவட்டத்திலுள்ள 25 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கோப் சிற்றி விற்பனைக் கூடங்கள் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. மக்களின் அன்றாட உணவுத் தேவைக்கான பொருள்களைத் தனியார் துறையினருடன் போட்டி போட்டு விற்பனை செய்யும் பணி கூட்டுறவாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கப்பலில் கொண்டு வர அனைத்து சங்கங்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

'கோப் சிற்றி' விற்பனை நிலையங்களில் வாங்கப்படும் பொருள்களுக்கு சிட்டை எழுதிக் கொடுக்கப்படுகிறது. தென்னிலங்கையில் உள்ள பூட் சிற்றிக் கடைகளில் காணப் படுவது போன்று இலத்திரனியல் சாதனங்கள் இல்லாதது பெருங்குறை தான். இருப்பின் இங்கு பணியாற்றுவோரின் அயராத உழைப்பின் பயனாக விரைவில் கோப்சிற்றி கடைகளிலும் நவீன வசதிகள் கொண்ட இலத்திரனியல் சாதனங்கள் பொருத்தப்படலாம்.

மாவட்ட கோப்சிற்றிக் கடைகள் கப்பலில் கொண்டுவரப்படும் பொருள்களை மட்டும் விற்பனை செய்யாமல் உள்ளூர் உற்பத்திப் பொருள்களையும் சந்தைப் படுத்த முயற்சிக்கவேண்டும். பிரதேசத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை சேர்வந்தவர்களால் சுய தொழில் முயற்சியின் கீழ் ஆக்கப்படும் பொருள்களையும் இக்கடைகளில் விற்பனை செய்ய வேண்டும் – என்றார்.

# இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இலகுவான விடயமல்ல

## அமெரிக்க உதவிச் செயலர் கருத்து

இலங்கையின் மனித உரிமை மற்றும் இனப்பிரச்சினை என்பனவற்றுக்குத் தீர்வு காண்பது இலகுவான விடயமல்ல என்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தெற்காசியாவின் அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொன் கெம்ப் தெரிவித்துள்ளார்.

டொன் கெம்பின் விஜயம் குறித்து அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மூன்று நாள்கள் இலங்கையில் தங்கியிருந்த டொன் கெம்ப், வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் நீதியமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் ஆகியோரைச் சந்தித்து பேச்சுகளை நடத்தினார்.

இவை குறித்து கருத்துத் தெரிவித்த டொன் கெம்ப், இலங்கையின் மனித உரி மைகள் மற்றும் இனப்பிரச்சினை ஆகிய வற்றிற்குத் தீர்வு காண்பது இலகுவான விடயம் அல்ல என்பதை சுட்டிக்காட்டினார். எனினும் இதற்கென மீள் தீர் வொன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் சிந்தனை செய்ய வேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தினார். - எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (சி)

# 'சோனியாவை பிரதமராக்குவதற்கு தயாராக இருந்தாராம் அப்துல் கலாம்'

## கலாமின் உதவியாளர் பி.எம்.நாயர் தெரிவிப்பு





கடந்த 2004ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு பின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி இடதுசாரிகள் ஆட்சியமைக்க தயாரான போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை பிரதமராக அறிவிக்கும் கடிதத்தில் கையெழுத்திட அப்போதைய ஜனாதிபதி அப்துல் கலாம் தயாராக இருந்தார் என்று கலாமின் உதவியாளர் பி.எம்.நாயர் தற்போது தெரிவித்துள்ளார்.

சோனியாகாந்தி இத்தாலியில் பிறந்தவர் என்ற காரணத்தைக்காட்டி பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரித்தன. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் சோனியாவுக்கு ஆதரவாக இருந்தும், மன்மோகன் சிங்கை பிரதமர் பதவிக்கு சோனியா பரிந்துரை செய்தார். சோனியாவின் மனமாற்றத்துக்கு ஜனாதிபதி அப்துல்கலாமும் காரணம் என அப்போது கூறப்பட்டது. ஆனால், இந்த விவகாரத்தில் அப்துல் கலாமின் பங்கு இதுவரை இரகசியமாக இருந்து வந்தது. அண்மையில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சோனியாகாந்தி, அப்துல் கலாம் பரஸ்பர கடித போக்குவரத்து குறித்து தகவல் அளிக்க மத்திய தகவல் ஆணையம் மறுத்திருந்தது.

இந்நிலையில் சோனியாவை பிரதமராக்க கலாம் தயாராக இருந்தார் என அவரது உதவியாளர் நாயர் இப்போது தெரிவித்துள்ளார்.

# மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கும்போது சமாதான முன்னெடுப்புகள் கைகூடி வராது

## நீதியரசர் பகவதி வலியுறுத்து

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்று சர்வதேச சுயாதீன சட்டவல்லுநர் குழுவின் தலைவரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான பி.என்.பகவதி தெரிவித்துள்ளார்.

சட்டவல்லுநர் குழு இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளநிலையில் கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதுதொடர்பில் பகவதி மேலும் கூறியவை வருமாறு:-

''மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கின்றபோது அது சமாதான முன்னெடுப்புக்களை கடுமையாகப் பாதிக்கும். மனித உரிமை மீறல்கள் நிகழ்கின்றபோது சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்க முடியாது. தற்போது மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. இனங்களுக்கு மத்தியில் விரோத மனப்பான்மை ஏற்பட்டுள்ளது. விரோதம் பகைமையை உருவாக்கும். இந்தப் பகைமை உணர்வை சமாதானத்துக்குப் பாரிய எதிரியாக நான் கருதுகின்றேன்.''யுத்தத்தின் கொடூரம் காரணமாக பலருக்கு அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்திசெய்ய முடியாத நிலை காணப்படுகிறது என என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இலங்கைத் தீவு சிறந்த வரலாற்றைக் கொண்டது. எனினும், இன்று இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியவில்லை. யுத்தம் எப்போதும் தீர்வாக அமையாது.'' - என்றார் பகவதி. (சி)

# வலைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம் ஏப்.25

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1999 , 2000 ஆண்டுகளில் சங்கத்தில் இணைந்துகொண்ட அங்கத்தவர்களும், 2005 ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த ஏ,பி,சி தரத்தில் உள்ளவர்களும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (50)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகைகளின் சிறப்பையும் பயன்பாட்டையும் வெளிப்படுத்தும் கண்காட்சி கைதடியில்

இலங்கையில் சுதேச மருத்துவமானது ஆயுர்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யுனானிமருத்துவம், தேசியமருத்துவம் என நான்கு பிரிவுகளைக் கொண்டது. அதில் சித்த மருத்துவமானது தமிழர்களின் கலை, கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்து காணப்படும் ஒரு பாரம்பரிய மருத்துவ முறையாகும். இம் மருத்துவமானது ''சித்துக்கள்'' கைவரப் பெற்ற சித்தர்களால் உருவாக்கப்பட்டமை இதன் சிறப்பம்சமாகும். அத்துடன் இம் மருத்துவ முறையில் பக்க விளைவுகள் அற்ற இயற்கையில் கிடைக் கக்கூடிய மூலிகைகள் சிகிச்சையில் பெருமளவில் பயன்படுத்தப்படுவது குறிப்பி டத் தக்கது.

சித்த மருத்துவத்தின் தந்தையாக அகத்தியர் போற்றப்படுகின்றார். சித்தர்கள் மக்கள் ஆரோக்கியமாக வாழ அரும்பெரும் இரகசியங்களைக் கூறி வைத்துள்ளனர். ஆரம்ப காலத்தில் குருசிஷ்ய முறையில் கற்பிக்கப்பட்டு பல்வேறு படிமுறைகளினூடாக பயணித்த இம் மருத்துவ முறையானது தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு துறையாக இயங்கி வருகின்றது. பல்கலைக்கழகத்தின் ஏனைய பிரிவுகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவது போன்றே சித்த மருத்துவத்துறைக்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இக் கற்கைநெறி 5 வருட பட்டப்படிப்பையும் ஒரு வருட உள்ளக பயிற்சியையும் கொண்டது. மேலும் சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவம், உடற்கூற்றியல், உடற்தொழிலியல், உயிர் இரசாயனவியல், குணபாடம் (மூலிகையியல்), மருந்து செய்முறையியல், நோய் நாடல் சிகிச்சை, குழந்தைமருத்துவம், சமூக மருத்துவம், அறுவைமருத்துவம், மகப்பேற்றியல் போன்ற பாடங்களை உள்ளடக்கியுள்ளது. இவற்றை இக் கண்காட்சி உள்ளடக்கி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதிலும் இக் கண்காட்சியில் மூலிகைகளும் மூலிகைப் பொருள்களும்பெருமளவில்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமைஇதன்சிறப்பம்சமாகும்.

மூலிகைகளானவை பண்டைய காலத்திலிருந்தே உணவு மருந்தாக மட்டுமன்றி உணவுக்குச் சுவையூட்டும் வாசனைப் பொருள்களாகவும், சாயமூட்டிகளாகவும், அழகு சாதனப் பொருள்களாகவும் கிருமி கொல்லியாகவும் பயன்படுத்தப்பட்டு வந் துள்ளன.

> சித்த மருத்துவ மாணவ மன்றத்தின் ஏற்பாட்டில், கைதடியில் இயங்கும் யாழ்.சித்த மருத்துவத் துறையில் இன்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை சித்த மருத்துவக் கண் காட்சி இடம்பெறவுள்ளது. அதனை யொட்டி இந்த ஆக்கம் வெளிவருகின்றது.

நவீன ஆய்வுகள் மூலிகைகளின் பண்டைக் காலப் பயன்பாடுகள் செப்பமானவை என கண்டறிந்ததுடன், அவை உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்காது உடல் நலத்தைப் பேணவும் நோய்களைக் குணமாக்கவும் சிறப்பானவை என நிரூபித்துள்ளன.

சித்தர்களின் அறிவுரைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி ஆரோக்கியமான சமுதாயத் தைக் கட்டியெழுப்புதல் மூலிகைகள் பற்றிய அறிவை மக்களுக்கு ஏற்படுத்தி அதன் பாவனையை அன்றாட வாழ்வில் ஏற்ப டுத்துதல், இயற்கையாகக் கிடைக் கும் மூலிகைகளை அழிவிலிருந்த பாதுகாத்தல், அவற்றைச் சந்தைப்படுத் தும் நிலையைத் தூண்டுதல், வீடுகளில் பாடசாலைகளில் சிறிய இடத்தில் சிறந்த முறையில் மூலிகைத் தோட்டத்தை அமைக்கத் தூண்டுதல், மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகள் பற்றி ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வருதல், அதன்பாவனையைத் தூண்டுதல், யோகாசனம், மூச்சுப் பயிற்சி, தியானம் போன்றவற்றை மக்கள் மேற்கொள்ள வழிகாட்டல் என்பன வற்றை நோக்கமாகக் கொண்டே இக்கண் காட்சியானது சித்த மருத்துவ மாணவ மன்றத்தினால் UNDP யின் அனுசரணையுடன் கைதடியில் உள்ள சித்த மருத்துவ வளாகத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியானது இன்று ஏப்ரல் 25ஆம் திகதி தொடக்கம் சித்திரை 30ஆம் திகதி வரை நடைபெறும். இக் கண்காட்சியில் 200ற்கு மேற்பட்ட மூலிகைகள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளதுடன் வீட்டு மூலிகைத் தோட்ட மாதிரி, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய மூலிகைகள் , மூலி கையில் இருந்து தயாரிக்கப்பட்ட பானங்கள், உணவு வகைகள், பயன்படுத்தப்படும் அழகு சாதனப் பொருள்கள், நோ, வலி, போன் றவற்றிற்கு பயன்படுத்தும் எண்ணெய் வகைகள் என்பனவும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளதுடன் மக்கள் அவற்றை வாங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

கா:பொ.த. உயர்தர மாணவர்கள் பயன் பெறும் பொருட்டு மனித உறுப்புக்கள் அவற்றின் தொழிற்பாடுகள் என்பனவும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

ஒவ்வொருவரும் நோய் அணுகாமல் கடைப்பிடிக்கவேண்டியவழிமுறைகள்,உணவுப் பழக்க வழக்கங்கள் என்பன மிகவும் எளிமையான முறையில்எடுத்துக்காட்டப்படவுள்ளது.

மேலும் தாய்மார்களின் நலன் பேணும் முகமாக அவர்களின் உணவுமுறைகள், சேர்க்க வேண்டிய உணவுப் பொருள்கள், தவிர்க்க வேண்டியவை, தாய்சேய் நலம் பேணும் ஒழுங்கு முறைகள், குழந்தை களின் ஆரோக்கியம், தாக்கும் நோய்கள், சிகிச்சை என்பன தொடர்பாக விவரமான காட்சிப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளதுடன் செய்முறை விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளது.

சித்தர்களில் ஒருவரான திருமூலர் குறிப்பிட்டவாறு ''உடம்பால் அழியின் உயிரால் அழிவர்'' எனும் முது மொழிக் கிணங்க உடலினைப் பலமுறப் பேணி உயிரினைக் காக்கும் முறையினை இம் மூலிகைக் கண்காட்சி மூலம் கண்டுணர்ந்து அவற்றினை வாழ்வில் பயன்படுத்தி நோயில்லா நெறி பேணி வளமுடன் வாழ பொது மக்கள் யாவரையும் இம் மூலிகைக் கண்காட்சி வரவேற்று நிற்கின்றது.

**வைத்திய கலாநிதி**
**திருமதி சிவஞானமணி பஞ்சராசா,**
**தலைவர், சித்த மருத்துவத்துறை.**

---




## முருகன் வெதுப்பகம்

### புதிய கட்டடத் திறப்பு விழா

துறையா மூலை, புலோலி தெற்கு மந்திகையில்
எமது புதிய கட்டடத் திறப்பு விழா
இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு
சுபவேளையில் திறந்துவைக்கப்படுகிறது. வாடிக்கையாளர் கள்,
விற்பனையாளர்கள், அன்பர்கள், யாழ்.மாவட்டத்திலுள்ள
வெதுப்பக உரிமையாளர்கள் உள்ளிட்ட அனைவரையும்
இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

**முருகன் வெதுப்பகம்**
மந்திகை, புலோலி.


## வலயக் கல்வி அலுவலகம்- தென்மராட்சி
## கேள்வி அறிவித்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் (SEMP II)- 2008 நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட Agriculture Laboratories கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவரமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

01. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும், பதிவுப் புத்தகம் 2008 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதிசேர் (Vat) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 25.04.2008 ஆம் திகதியிலிருந்து 09.05.2008 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கு முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | யா/ மீசாலை வீரசிங்கம் விவசாய ஆய்வுகூடம் நிர்மாணித்தல் (40'X 25') | 750.00 | 26, 100/= | M7 |
| 02. | யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. விவசாய ஆய்வுகூடம் நிர்மாணித்தல் (40'X 25') | 750.00 | 26, 100/= | M7 |

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப் பிரதியையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்பட வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு தென் மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2008ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 11.30 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

(சி/552548)

திரு.து. [illegible]
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி

## வீடுகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்

வலிதென்மேற்கு.ஏப்.25

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் ''ஆரோக்கியமான வாழ்வுக்கு வீட்டிலேயே நீரைச் சுத்தமாக்கிக் கொள்வோம்'' என்ற புதிய திட்டத்திற்கிணங்க சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் தயாரிக்கப் பட்டு வருகின்றது.

இதற்கென தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஒரு தொகைப் பிளாஸ்ரிக் கொள்கலன் போத்தல்களை வழங்கியுள்ளதாகவும் இப்பிரிவு பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களுக்கிணங்க இங்கு சுத்தமான குடிதண்ணீர் தினமும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

## முட்டை விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்.ஏப்.25

காரைநகர்ப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக முட்டையின் விலை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

தற்போது 9 ரூபா முதல்12ரூபாவரையே முட்டை விற்பனை செய்யப் படுகின்றது. இதனால் கோழி வளர்ப்போர் நஷ்டத்தை எதிர் நோக்குவதுடன் அதிகரித்த விலையில் கோழித் தீவனத்தை பெற்று கோழி வளர்ப்பில் ஈடுபட முடியாமல் இருப்பதாகவும் சில வேளைகளில் குறைந்த விலையில் கூட முட்டைகளைச்சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் கவலைதெரிவிக்கின்றனர்.(202-250)

## இரு எம்.பிக்கள் சத்தியப் பிரமாணம்

கொழும்பு, ஏப். 25

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சரண குணவர்தன மற்றும் துலிப் விஜேசேகர ஆகியோர் அடுத்தமாதம் ஆறாம் திகதி சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவின் மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சரண குணவர்தனவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு துலிப் விஜேசேகரவும் நியமனம் பெற்றனர்.

சரண குணவர்தன அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகவும், துலிப் விஜேசேகர மேல்மாகாண சபையின் கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்களென்பது குறிப்பிடத்தக்கது. (சி)


## வாழ்த்துகின்றோம்

**மந்திகை முருகன் வெதுப்பகம்**
இன்று வெள்ளிக்கிழமை புதிய கட்டடத்தில்
பிரவேசம் செய்வதையிட்டு மனம் மகிழ்கின்றோம்.
வெதுப்பக உற்பத்தியில் வளர்ச்சி பெற்று தொடர்ந்தும்
சிறப்பான சேவைகளை மக்களுக்கு வழங்கவேண்டும்
எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**பிரியங்கா சைவ உணவகம்**
சந்தை எதிரில், மந்திகை.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியையான
இணுவில் தெற்கு பாலாவோடையைச் சேர்ந்த
**திருமதி இராசம்மா சங்கரப்பிள்ளை**
அவர்கள் 24.04.2008 வியாழக்கிழமை காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர் நலன்புரிக்கழகம்,
**இணுவில் மத்திய கல்லூரி.**
(73497)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் செல்வமணி



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் செல்வமணி (23.04.2008) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையகுட்டி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சீனியர் - பத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும் ரஞ்சிதா, சித்திரா பிறேம்குமார் (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை) காலஞ்சென்ற சுபத்திரா மற்றும் விஜயா ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான நரசிங்கம், வைரமுத்து (ராசா), சரஸ்வதி, மனோரஞ்சிதம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2008) வெள்ளிக்கிழமை அவரது புதுக்குடியிருப்பு இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
பிறேம்குமார்
(ரவி-மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்

# யாழ்.மாவட்டத்தில் புத்தாக்கக் கண்காட்சி: ஜூன் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.25

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவும் கல்வி அமைச்சும் இணைந்து எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் புத்தாக்கக் கண்காட்சிப் போட்டியை நடத்தவுள்ளன.

நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிக்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

* பிரிவு I - வகுப்பு 6 முதல் 9 வரையுள்ள கனிஷ்ட மாணவர்கள்.

வகுப்பு 10 முதல் 12 வரையுள்ள சிரேஷ்ட மாணவர்கள்

* பிரிவு II - பாடசாலை ஆசிரியர்களும் யாழ்.பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரிய கலாசாலை மாணவர்களும்.

* பிரிவு III - சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி முயற்சியாளர்கள்/ நிறுவனங்கள்

* பிரிவு IV - திறந்த பிரிவு (இதில் தனியார்களும் யாழ்.பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்களும் பங்குபற்றலாம்)

இக்கண்காட்சியில் தமது புத்தாக்கங்களை வெளிப்படுத்துபவர்களுள் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கத்துடன் 5 ஆயிரம் ரூபா பணமும் சான்றிதழும் வழங்கப்படும். இரண்டாவது இடத்தைப் பெறுபவருக்கு வெள்ளிப் பதக்கத்துடன் 3ஆயிரம் ரூபா பணமும் சான்றிதழும் வழங்கப்படும். அத்துடன் மூன்றாவது இடத்தைப் பெறுபவருக்கு வெண்கலப்பதக்கத்துடன் 2ஆயிரம் ரூபா பணமும் சான்றிதழும் வழங்கப்படும். இவற்றை விட குறிப்பிட்ட தராதரத்தை அடையும் புத்தாக்கங்கள் அனைத்திற்கும் பரிசாக ஆயிரம் ரூபாவும் சான்றிதழும் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் படிவங்களை பிரதி செய்து அதிபரூடாக விண்ணப்பிக்கலாம். இப்போட்டியில் தமது புத்தாக்கங்களைக் காட்சிப்படுத்த விரும்பும் ஏனையோர் தமக்கு அண்மையிலுள்ள பாடசாலையின் அதிபருடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை எடுத்து நிரப்பி அனுப்பலாம். அல்லது யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறைத் தலைவர் கலாநிதி நா.சிவயோகன் அவர்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களிடையேயான பாடசாலை, வலய மட்டப் புத்தாக்கப் போட்டிகள் அனைத்தும் மே 15ஆம் திகதியினுள் முடிவடையவேண்டும் எனவும் பங்குபற்ற விரும்பும் ஏனையோர் தமது விண்ணப்பங்களை மே 10ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறைத் தலைவர் கலாநிதி நா.சிவயோகனிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு கேட்டுள்ளது. (202)

# அடிப்படை நூல்களின் பட்டியல் தயாரிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.25

நூலக விழிப்புணர்வு நிறுவகம் சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு பொது நூலகங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றில் சேர்க்கக் கூடிய அடிப்படை நூல்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து வெளியீடு செய்யவுள்ளது.

இப்பட்டியல் அறிவை வளர்க்க வேண்டிய நூலகங்கள் யாவற்றிலும் அவசியமாக இருக்க வேண்டிய நூல்களின் விவரங்களை உள்ளடக்கியுள்ளது என நிறுவகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது ஓர் ஆரம்ப நிலைப் பட்டியலாகும். தொடர்ந்தும் புதிய நூல்களின் விவரங்கள் உள்ளடக்கப்பட்டு மேலும் அபிவிருத்தி செய்யப்படும். தேவைப்படும் நூலகங்கள் நிறுவகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)




# யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வைத்திய நிறுவனங்களில் ஊழியர் ஆய்வுச் சேவை

குருநகர்,ஏப்.25

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் வைத்திய நிறுவனங்களில் சேவை புரிந்து வரும் சகல உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வு காணும் நோக்குடன் நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் விரைவில் இந்த ஊழியர் ஆய்வுச் சேவையைஆரம்பித்து நடத்த உள்ளதாகப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந் நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவை எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படும். யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள் ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அவ்வவ் வைத்திய நிலையங்களில் வைத்து ஊழியர்கள், உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் சகலதும் ஆராயப்பட்டு தீர்வு மேற்கொள்ளப்படும்.

ஊழியர்களின் சுயவிவரக் கோவைகள் பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் யாவும் இந்நடமாடும் சேவையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நடமாடும் சேவையில் நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட துறை சார்ந்த ஊழியர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொள்ள உள்ளார்கள் எனவும் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (202-51)

# 'சிறுவர் சங்கமம்' நிகழ்வு மே 3ஆம் திகதி நல்லூரில்

யாழ்ப்பாணம்,ஏப்.25

குடும்ப புனர்வாழ்வு நிலையம், சாந்தியகம், சிறுவர் பாதுகாப்பு - இலங்கை ஆகியன இணைந்து நடத்தும் சிறுவர் சங்கம நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் சி.சி.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடு நேற்றுமுன்தினம் காலை குடும்ப புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்றது.

குடும்ப புனர்வாழ்வு நிலைய மாவட்ட இணைப்பாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன், சிறுவர் பாதுகாப்பு - இலங்கையின் திட்ட அலுவலர் எஸ்.சுசிகரன், சாந்தியகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை, அதன் திட்ட இணைப்பாளர் சி.விஜயரட்ணம் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்தச் சங்கமம் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

சிறுவர்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், அவர்களது திறன்களை வெளிக்கொண்டு வருதல், கலை, கலாசாரப் பகிர்வு, உணர்வுகளின் வெளிப்பாடு, சமூக அங்கீகாரம், சமாதானம், ஒற்றுமை ஆகியவற்றுக்கான எண்ணக்கருவை உருவாக்குதல், அனுபவங்களைப் பகிர்வதற்கான சந்தர்ப்பத்தை உண்டாக்குதல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்டதாக இந்தச் சிறுவர் சங்கம நிகழ்வு இடம்பெறும்.

அன்று காலை ஆரம்பமாகும் இந்த நிகழ்வு மாலைவரை நடைபெறவுள்ளது.

சிறுவர்களை மகிழ்வித்து அவர்களது மனங்களில் மாற்றத்தைக் கொண்டுவரும் கலை நிகழ்வுகளும் அங்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (50)



'சிறுவர் சங்கமம்' தொடர்பான பத்திரிகையாளர் மாநாட்டில் குடும்ப புனர்வாழ்வு நிலைய மாவட்ட இணைப்பாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன் விளக்கமளிப்பதையும் சாந்தியகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை, அதன் திட்ட இணைப்பாளர் சி.விஜயரட்ணம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# மல்லாகத்தில் 'கோப் சிற்றி' திறப்பு

வலி.வடக்கு.ஏப்.25

அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் (கோப் சிற்றி) காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்ட கூட்டுறவு நகர் கடை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கத்தினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சங்கத் தலைவர் சி.விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலி.வடக்கு, பிரதேச செயலர் சு.முரளிதரன், மக்கள் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் மா.சந்திரகாந்தன் வலி.வடக்கு காங்கேசன்துறை பிரதேச சபைச் செயலர் இ.அருணகிரி ஆகியோரும் கலந்துகொண்டனர். (202-86)

# யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு, நூல். வெளியீடு, விருது வழங்கல்

யாழ்ப்பாணம்.ஏப்.25

யாழ்.இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ள அமரர் பண்டிதர் க.சச்சிதானந்தன், அமரர் சு.வே. ஆகியோருக்கான நினைவு அஞ்சலி நிகழ்வும், க.தெய்வேந்திரன் எழுதிய 'கோபதியின் கதைகள்' சிறுகதைத் தொகுதி வெளியீடும் நாவேந்தன் விருது வழங்கல் நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

செங்கை ஆழியான் க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பண்டிதர் சச்சிதானந்தனுக்கான நினைவுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் அமரர் சு.வேயின் நினைவுரையை கலாநிதி செ. திருநாவுக்கரசும் நிகழ்த்துவர்.

சிறுகதைத் தொகுதியை இ.சங்கர் வெளியிட்டு வைக்க மதிப்புரையை கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் நிகழ்த்துவார்.

2006ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதியாகத் தெரிவான க.சட்டநாதன் எழுதிய 'புதியவர்கள்' சிறுகதைத் தொகுதிக்கு நாவேந்தன் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. கவிஞர் க.துரைசிங்கம் விருதை வழங்கிக் கௌரவிப்பார். (202-111)

# காரைநகரில் மயிர்கொட்டிகள் பெருக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

காரைநகரில் மயிர்கொட்டிகளின் பெருக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது.

காரைநகரின் பிரதான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பூவரசம் மரங்களில் இந்த மயிர்கொட்டிகள் பெருகி வீதிகளில் இறங்குவதால் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

மயிர்கொட்டிகளின் தாக்கத்திற்கு உட்பட்டு அன்றைய தினம் தங்கள் கடமைகளுக்கோ அல்லது பாடசாலைகளுக்கோ செல்லமுடியாது வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அடர்ந்த மரங்களை வெட்டி வீதித் துப்புரவுப் பணியை மேற்கொள்வதன் மூலம் மயிர்கொட்டிகளின் பெருக்கத்தை ஓரளவு குறைக்கமுடியும் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-250)

# நிறை குறைவான பிள்ளைகள், மனநோய் உள்ள பெண்கள் சம்பந்தமாக அதிக கவனம் செலுத்தவேண்டும்

## குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு அதிகாரி அறிவுறுத்தல்

குருநகர்.ஏப்.25

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சேவைபுரிந்து வரும் குடும்பநல உத்தியோகத்தர்கள் பிறப்பு நிறை குறைவான பிள்ளைகள் தொடர்பாகவும் மனநோய் உள்ள கருத்தரிக்கக்கூடிய வயது பெண்கள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

இதன்மூலம் தேவையற்ற கர்ப்பங்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கமுடியும் என யாழ்.பிராந்திய தாய்-சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி தி.சிவசங்கர் அறிவுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற பொதுச் சுகாதார மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் த.கிளின்ரஸ் தலைமையில் நடைபெற்ற இம்மாதாந்த கலந்துரையாடலில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், உணவு மருந்துப் பரிசோதகர் க.மகாதேவன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை குடும்ப நல உத்தியோகத்தர், கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை குடும்பநல உத்தியோகத்தர், மலேரியா தடை இயக்க பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தாய்மார் ஆறு மாதத்துக்குட்பட்ட தமது பிள்ளைகளுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கவேண்டும். புட்டிப் பாலூட்டுவதை முற்றாக நிறுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-51)

# புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்.ஏப்.25

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தினர் உலக புத்தக தினத்தையொட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புத்தகக் கண்காட்சியையும் இலக்கியக் கருத்தரங்குகளையும் நடத்தவுள்ளனர்.

பிரதேச சபை செயலாளர் வே.சிவராசலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

'எழுந்திரு! விழித்துக் கொள்! என்னும் புத்தகக் கண்காட்சி, 'மக்கள் வாழ்வில் இலக்கியத்தின் பங்கு' என்னும் தலைப்பில் ச.லலீசனும், தமிழர் கண்ட மனங்கொண்ட வாழ்வு' என்னும் தலைப்பில் மட்டுவில் மகா வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியமும் உரை நிகழ்த்துவர்.

உலக புத்தக தினத்தையொட்டி நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நூலகருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கன்றுகள், உபகரணங்கள் அன்பளிப்பு

நல்லூர், ஏப்.25

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஜே/114 கிராம அலுவலர் பகுதியைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள், சேதனப் பசளை தயாரிப்பதற்கான உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனால் வழங்கப்பட்டன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(202-111)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 25.04.2008 - 14.05.2008 பி.ப. 2மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 15.05.2008
நண்பகல் 12 மணிவரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி - 15.05.2008 பி.ப. ஒரு மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. அங்களப்பாய் வீதி திருத்தம், இணுவில் | 28000.00 | 575.00 | M8 |
| 2. குட்டியப்புலம் G.T.M.S பாடசாலை வீதி திருத்தம், புன்னாலைகட்டுவன் | 17000.00 | 575.00 | M8 |
| 3. சிங்கத்தின் கலட்டி வீதி திருத்தம், உடுவில் | 8000.00 | 575.00 | M8 |
| 4. சாமுவேல் மான் வீதி திருத்தம், சங்குவேலி | 18000.00 | 575.00 | M8 |
| 5. செபமாலை மாதா கோயில் வீதி திருத்தம், உடுவில் | 10000.00 | 575.00 | M8 |
| 6. சோமராம் தோட்ட குறுக்கு வீதி திருத்தம், உடுவில் | 15000.00 | 575.00 | M8 |
| 7. தொழிலாளர் விடுதி திருத்தம், சபாபதிப் பிள்ளை வீதி | 9000.00 | 575.00 | M9 |
| 8. சுன்னாகம் மீன்சந்தைக்குள் இருக்கும் இறைச்சிக் கடை, கருவாட்டுக் கடைகள் திருத்தம் | 10000.00 | 575.00 | M9 |
| 9. சந்தை தெற்கு வீதிக்கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் கழிவுகாண் மீது கடவைத் தட்டுகள் அமைத்தல் | 6000.00 | 575.00 | M9 |

குறிப்பு: மேற்படி வீதி திருத்த வேலைகளுக்குரிய தார் பிரதேச சபையால் வழங்கப்படமாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி ''செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும் அதன் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
22.04.2008 (சி/552519)

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.25

சைக்கிளில் சென்ற நபரை மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் வந்தவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் தர்மரத்தினம் (வயது 54) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(202-207)

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கபிரியேல் அன்ரனி பேர்னாண்டோ
(இளைப்பாறிய அதிபர்)

மலர்வு
19.07.1927

உதிர்வு
25.04.2000

ஆண்டெட்டு மறைந்தது - ஆனாலும்
ஆழ்மனதில் ஆழமாய் பதிந்த வேதனைகள் தீரவில்லை
எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
கண்ணீரும், செபமும் கலந்து அஞ்சலி
செய்து, வணங்கி நிற்கும்...

ஆர்க் லேன், உடுவில். (73464) குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## நினைவலைகள்

| 19ஆம் மாத நினைவு நாள் | முதலாம் வருட நினைவு நாள் |
|---|---|
| தோற்றம் 19 ★ 10 ★ 1963 — மறைவு 04 ★ 09 ★ 2007 | தோற்றம் 23 ★ 08 ★ 1925 — மறைவு 06 ★ 05 ★ 2007 |





திருமதி
குணரட்ணம் சுசிலா
திதி: ஏகாதசி

25.04.2008

அமரர் வேலுப்பிள்ளை
அப்புத்துரை (ஆச்சாரியார்)
திதி: பஞ்சமி

எங்கள் விட்டு ஒளி விளக்குகளே!
எங்களை வாழவைத்த தெய்வங்களே!
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
இதை யார் அறிவார்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(73400)

சுசி வாசா, நீர்வேலி மத்தி. குடும்பத்தினர்.

# நீங்காத நினைவில் ஓராண்டு.....

## திருமதி உமாதேவி நடராசா

(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

**தோற்றம்: 29.10.1951**

**மறைவு: 25.04.2007**

**திதி: 13.05.2008**



காலையும் வெந்தது
மாலையும் வெந்தது
ஆறாப் புண்ணில் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின் நினைவு
கண்ணியம் காக்கும் தாயே!
புண்ணியம் போற்றப் பிறந்தவளே!
ஓராண்டு காலம் ஓடிப் போனாலும்
உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாத - நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்.

**கணவர்-சி.நடராசா**
(அதிபர்).

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(72853)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு விவசாயிகளின் தொழில் பெருக்கத்துக்கு புதிதாக ஆறு வகை வாழ்வாதாரத் திட்டங்கள்

## இவ்வருடம் நடைமுறைக்கு வருகிறது என்கிறார் பிரதிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம் இந்த ஆண்டில் ஆறு வகை வாழ்வாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 2ஆயிரத்து 720 பேர் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொள்கலன் பயிர்ச்செய்கை, சணல், கறிமுருங்கைச் செய்கைகள், விவசாய வனவளர்ப்பு போன்றவற்றை ஊக்குவிக்கவும் வர்த்தக ரீதியான மாமரச் செய்கை, நெல் அறுவடை இயந்திரம், சூடடிக்கும் இயந்திரம் ஆகியவற்றை வழங்கவும் இந்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த அமுலாக்கலில் 'வேள்ட் விஷன்' நிறுவனம்




நிறைவேற்று முகவராகவும் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து திட்டத்தைச் செயற்படுத்துபவராகவும் செயற்படும் என பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

திட்டம் - 1

**கொள்கலன் பயிர்ச் செய்கை**

பருத்தித்துறை, வேலணை, யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 520 மீனவக் குடும்பப் பயனாளிகளுக்கு முறையே ஒரு பயனாளிக்கு 12கொள்கலன்களில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிப் பயிர்கள் வழங்கப்படும். இதற்கான மரக்கறிப் பயிர் நாற்றுக்கள் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலுடன் சமூக மட்ட அமைப்புக்களால் உற்பத்தி செய்யப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கு விநியோகிக்கப்படும். கொள்கலன் பயிர்கள் வழங்கியபின் 3 மாதம் வரை திட்டத்தின் பங்காளி நிறுவனங்களினால் அது மதிப்பீடும் கணிப்பும் செய்யப்படும்.

திட்டம் - 2

**சணல் செய்கையை ஊக்குவித்தல்**

இது இரண்டு வகையில் நடைபெறும்.

**விதை உற்பத்தி**

கைதடி, கீரிமலை, கரவெட்டி, பருத்தித்துறை போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து நூறு பயனாளிகள் இத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்படுவார்கள்.

இவர்களுக்குச் சணல் விதையை உற்பத்தி செய்வதற்காக பயனாளி ஒருவருக்கு 5 கிலோ சணல்விதை, 100 மி.லீற்றர் அற்றப்புறோன், தரை பண்படுத் தலுக்காக ரூபா 2 ஆயிரம் வழங்கப்படுவதுடன் உற்பத்தி தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படும்.

**பசுந்தாள் பசளை உற்பத்தி**

சகல பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்தும் 1000 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 10கிலோ சணல் விதை வழங்கப்படுவதுடன் பயிர் செய்கை தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனையும் வழங்கப்படும்.

திட்டம் - 3

**கறி முருங்கை செய்கையை ஊக்குவித்தல்**

இதற்கென சகல விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் இருந்தும் ஆயிரம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு பயனாளிக்கு 5 கன்றுகள் வழங்கப்படும்.

திட்டம் - 4

**விவசாய வனவியல்**

விவசாய வனவியலை வீடுகள், பாடசாலைகள், தேவாலயங்களில் ஸ்தாபிக்கும் நோக்குடன் கைதடி, சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, புத்தூர், உரும்பிராய், உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதெனவும், ஒவ்வொரு விவசாய போதனாசிரியர் பிரிவிலும் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா 10 மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

மாங்கன்றுகள் 10X10 மீற்றர் இடைவெளியில் நடுகை செய்ய வேண்டும். செறிவான மா உற்பத்தி முறையில் நடுகை இடைவெளியைக் குறைத்து கூடுதலான மாங்கன்றுகளைக் குறிப்பிட்ட நிலப்பரப்பில் நடுதல் வேண்டும்.

குறைந்த இடைவெளியில் நடப்படும் மாங்கன்றுகள் தொடர்ச்சியான பயிற்றுவித்தல், கத்தரித்தல் மூலம் சிறிய தோற்றத்தினையுடைய மரங்களாக வளர்த்தல் போன்றவற்றில் சிறிய தோற்ற மரங்களில் இருந்து தரமான பழங்களையும் கூடிய எண்ணிக்கையிலான பழங்களையும் ஓரளவு பரப்பில் இருந்து பெறக்கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு பிரிவில் இருந்தும் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு வேம்பு - 05, முழுநெல்லி - 05, ஜம்பு - 02 என தலா ஒவ்வொரு பாடசாலைக்கும் 12 மரக்கன்றுகளும் அவற்றைப் பாதுகாப்பதற்கான கூடுகளும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விவசாய போதனாசிரியர்

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர்

பிரிவில் இருந்தும் 10 இந்து/கிறிஸ்தவ தேவாலயங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றிற்கும் மலைவேம்பு, முழுநெல்லி, ஜம்பு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு பாதுகாப்புக் கூடுகளும் அளிக்கப்படும். இத்திட்டங்களும் தொடர்ச்சியாக 3 மாதங் களுக்கு கண்காணிப்பும் மதிப்பீடுகளும் மேற் கொள்ளப்படவுள்ளன.

திட்டம் - 05

**வர்த்தக ரீதியிலான மாமரச் செய்கை**

இத்திட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இருந்து ஆர்வமுள்ள மாமரச் செய்கையாளர்கள் 100 பேர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 16 தரமான ஒட்டு மாங்கன்றுகளும் அசேதன உரப்பசளையாக 6.5 கிலோ யூரியா, ரீ.எஸ். பி. 8 கிலோ, எம்.ஓ.பி.3.6 கிலோ, பிளாஸ்டிக் கூடை, செடிகளை வெட்டும் வாள் - 2என் பன வழங்கப்படுவதுடன் இச் செய்கை தொடர்பான தொழில் நுட்ப ஆலோ சனைக ளும் வழங்கப்படவுள்ளன.

6ஆவது திட்டம்

**விதை நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளை வலுப்படுத்துதல்**

தென்மராட்சி, உடுவில், கோப்பாய், தெல்லிப்பழை, சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து விதை நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 கமக்காரர் அமைப்பிற்கு முறையே ஓர் அமைப்பிற்கு நெல் அறுவடை இயந்திரம் ஒன்றும் சூடடிக்கும் இயந்திரம் ஒன்றும் வழங்கப்படும். இந்த இயந்திரங்களைப் பாவிப்பதற்கு விதை நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்டுவதுடன் இதனைப் பாவித்தல், பராமரித்தல் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளும் விவசாய திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது.

பெண் தலைமை தாங்கும் குடும்பம் குறைந்த மாதவருமான முடையவர்களுக்கு இத்திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படுவதுடன ஆர்வமுடையவர்கள் நீர் வசதிகள், போதிய இடவசதிகள் என்பவற்றில் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள். போதனாசிரியர் கள் 'வேள்ட் விஷன்' பிரதிநிதிகள், தெரிவு செய்யப்பட்ட கிராமத்தின் கிராம அலுவலர்கள், சமூக மட்ட உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து திட்டப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பார்கள் எனவும் பிரதிப் பணிப்பாளர் இது பற்றி விளக்கம ளிக்கையில் தெரிவித்தார்.

சந்திப்பு: நம்பி

# இறைவனுக்கு நன்றி தெரிவிப்பது எப்படி?

வாழ்க்கை அனுபவங்களால்தான் இறைவனை உணர முடியும். அறிவினால் மட்டும் இறைவனைக் கண்டுகொள்ள முயல்கிறவர்கள், யானையைத் தடவி அதன் தன்மையை அறிய முயன்ற குருடர்களைப் போல் தடுமாறுகிறார்கள். கண்களால் மட்டும் நாம் பார்க்கின்றோம் என்பது பொய். மனதினாலும் நம்மால் பார்க்க முடியும் என்பது தான் மெய்.

இறை என்னும் போற்றலோடு தியானத்தின் மூலம் நாம் ஐக்கியப்பட்டுவிட்டால் போதும் கேட்டது கிடைக்கும். கேட்காமலும் கிடைக்கும். விரும்பியது நடக்கும். விரும்பாவிட்டாலும் நடக்கும். நடப்பதெல்லாம் நன்மையாகவே நடக்கும். பகவான் நமக்காக எவ்வளவோ சௌகரிங்களைச் செய்து கொடுக்கிறான். உணவு, உடை, இருப்பிடம் எல்லாவற்றிற்கும் வழி செய்து வைத்திருக்கிறான். நாம் அவைகளை அனுபவிக்கின்றோம். இதற்கு நன்றியாக நாம் அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே?

'பகவானே இது உனக்கு' என்று சொல்லி எதையாவது அர்ப்பணம் செய்யவேண்டும். பகவான் திருப்தி அடைகின்றான். பகவானுக்கு நைவேத்தியம் வைப்பது என்பது ஒரு நன்றி. நாம் வைப்பதைப் பகவான் ஏற்றுக் கொள்கிறான் என்கிற மனோபாவத்தோடு சுத்தமானதாகவும், சிறந்ததாகவும், உள்ளத்தை அவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். 'வேறு ஒன்றுமில்லாவிட்டாலும் ஒரு புஷ்பம், ஒரு பழம், ஒரு துளசித்தளம் அல்லது ஓர் உத்தரணிஜலம் இதில் எதையாவது ஒன்றை அர்ப்பணம் செய்! இது போதும்' என்றார் பகவான்.

பகவான் தானே இப்படிச் சொல்லி விட்டார் என்று ஒரு புஸ்பத்தைப் போட்டு விட்டு, நாம் பின்னர் சாப்பிடலாம் என்பதல்ல, நம்மால் ஏதெது முடியுமோ அதைப் பிரியத்துடன் அளிக்க வேண்டும்.

'பழமோ, தேங்காயோ வாங்குவதானால் சிறிதாக வாங்கினால் போதும் என்பார்கள். பெரிய வாழைப்பழமும், பெரிய தேங்காயும் பகவானுக்குப் பிடிக்காதா? நைவேத்தியம் என்றால் மனம் இப்படிச் சொல்கிறதோ?

எல்லாமே அவனால் படைக்கப்பட்டவை; நம்மிடம் என்ன இருக்கின்றது? எதைக் கொடுத்தாலும் அவனது பொருள்களையே அவனுக்குக் காண்பித்து விட்டு, நாம் சாப்பிட்டு விடுகிறோம். காண்பிப்பதில் கூடவா கருமித்தனம். ஐந்து ரூபாவில் ஓர் அர்ச்சனை செய்யச் சொல்லி, அதில் தன் குடும்பம், மாமனார் குடும்பம் என்று எல்லோருடைய நலத்திற்கும் பிரார்த்திக்கச் சொல்லுவான். இவ்வளவு பேருக்கும் சேமத் தைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான். இந்தச் சின்ன தேங்காய் பாதிக்காகத் தானா கொடுக்கிறான்? அந்த




அர்ச்சனை கூட, 'பகவானே! எனக்கு இந்தக் காரியம் ஜெயமானால் அர்ச்சனை செய்கிறேன்' என்பான். இதோ அர்ச்சனை செய்து விட்டேன். இந்தக் காரியத்தை ஜெயமாக்கிக் கொடு என்று முன்னதாக அர்ச்சனை செய்ய மாட்டான். பகவானிடமே அவ்வளவு அவ நம்பிக்கை இருந்தால், பகவானுக்கு மட்டும் மனம் வருமா?

அவனையே நம்பு: நல்லதை அவனுக்கு அர்ப்பணம் செய்: அருள் செய்யவேண்டியது அவனது கடமை; அவன் ஏமாற்றமாட்டான்.

(நன்றி: ஞானச்சுடர்)

# சொக்லட் ஐஸ்கிறீம் (Chocolate Icecream) தயாரிப்போம்

*(10-15 பேருக்குப் போதுமானது)*

*தேவையான மூலப்பொருள்கள்*

*01. ரின்பால்-1ரின்*
*02. பால்மா- 400 கிராம்*
*03. கொக்கோ பவுடர்- 3மேசைக் கரண்டி*
*04. தண்ணீர்- 4ரின் (ரின் பாலளவு ரின்)*
*05. சீனி- 300 கிராம்*
*06. சிறிதாக வெட்டிய கஜூ- 100 கிராம் (வறுத்தது)*
*07. சோடா- 4ரம்பளர் (விரும்பியது)*
*08. ஜெலற்றின்- 1 தேக்கரண்டி*
*09. வனிலா- 2 மேசைக்கரண்டி*
*10. கொதிநீர்- ½ ரம்ளர்*

*ஜெலற்றினை ½ ரம்ளர் கொதிநீருள்ள பாத்திரத்திலிட்டு முற்றாகக் கரையும்வரை கரைக்கவும். கரையாவிடில் சிறிது சூடாக்கிக் கரைக்கலாம். பாத்திரத்தில் ரின்பால், பால்மா, கொக்கோ பவுடர், சீனி என்பவற்றை விட்டு நன்கு கலக்கிய பிறகு தண்ணீர், விரும்பிய வகையான சோடா என்பவற்றை விட்டு முற்றாகக் கரையும் வரை கரைத்துக் கொள்க.*

*பின்பு இக்கலவையில் ஜெலற்றின் கலவை, வனிலா என்பவற்றை விட்டுச் சேர்த்து பீற்றரால் (beater) நன்றாக அடித்தபின் உறைபெட்டியில் (Freezer) சுமார் 3மணித்தியாலயங்கள் வரை வைத்து அதன் பிறகு எடுத்து மீண்டும் நன் றாக அடித்து மூடி உறை பெட்டியில் வைத் தல் வேண்டும். இறுகியதும் எடுத்து ஐஸ்கிரீம் பரிமாறும் கிண் ணங்களில் நிரப்பி சொக்லேஸ் சோஸை மேலை ஒரு கரண் டியளவு*




*ஊற்றி வறுத்த கஜூ வைத் தூவிய பின் பரிமாறலாம்.*

*குறிப்பு: திரவத்தன்மையான பால், நீர் ஆகியவற்றை முதலில் நன்றாகக் கலக்க வேண்டும். பின்னர் பாத்திரத்தை சிறிது சூடாக்க வேண்டும். வெப்பநிலை 50°C ஐ அடைந்ததும் திண்மத்தன்மையான மூலப்பொருள்களை இதனுள்ளிட்டு கலக்க வேண்டும். பின்னர் 68°C வெப்பநிலையில் 30 நிமிடங்கள் வரை சூடாக்க வேண்டும். அதன்பின்னர் 4 மணித்தி யாலயங்கள் வரை பதத்திற்கு வரை வைத்தல் வேண்டும். இறுதியில் உறைபெட்டியில் சுமார் 3 மணித்தியாலங்கள் வரை வைத்தல் வேண்டும்.*

தொகுப்பு: **என்.ஜே.இரத்தினதயா,**
உதவித் தொழில்நுணுக்க வல்லுநர், மாவட்ட காரியாலயம்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.



மீசாலை சித்திரவேலாயுதர் ஆலய திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெற்ற கந்தரநுபூதிப் பெருவிழாவின் போது அருணகிரிநாதரின் திருவுருவப்படம் உலாவலமாக எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (72)



மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது அம்மன் சித்திர தேரில் பவனி வந்து அருள்பாலிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:ஸெலி.தென் மேற்குச் செய்தியாளர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்ம ஈடேற்ற வழிபாட்டு அழைப்பும் நன்றி நவிலலும்





அமரர் கதிரவேலு இரத்தினம் (சிவபாதம்)

திருமதி இரத்தினம் பொன்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை)

| | | |
|---|---|---|
| 07.08.1934 | தோற்றம் | 13.02.1938 |
| 04.03.2008 | மறைவு | 30.03.2008 |

எமது குடும்ப தீபங்கள் மறைந்தபோதும், இறுதிச்சடங்கின் போதும் நேரிலும் தொலைபேசி மூலமும் நாளேடுகள் மூலமும் கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் எமது துயரில் பங்குகொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

இவர்கள் இருவரதும் ஆன்ம ஈடேற்ற வழிபாட்டு நிகழ்வுகள் இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்செழுவிலுள்ள இல்லத்திலும் (29.04.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு சிறுப்பிட்டியிலுள்ள இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அந்நாளகளில் தாங்களும் எமது குடும்பத் தலைவர்களது ஆன்ம ஈடேற்ற நிகழ்வுகளில் பங்கு கொள்வதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அச்செழு, நீர்வேலி.
தொ.பே.: 4591410
(சி/552535)

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
தொ.பே.0602216648

குடும்பத்தினர்.

## தந்தை செல்வநாயகம்



### 31 ஆவது ஆண்டு நினைவுநாள்

அஞ்சலி நிகழ்ச்சி
காலையில்...

காலம்: நாளை (26.04.2008)
சனிக்கிழமை மு.ப.9.30 மணி

இடம் : தந்தை செல்வா நினைவிடம்,
தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.

சர்வமதப் பிரார்த்தனை



மாலையில்...

### நினைவுப் பேருரை

காலம் : 26.04.2008 சனிக்கிழமை
பிற்பகல் 3 மணி

இடம் : யாழ்.பொது நூலக கேட்போர்கூடம்

தலைமை : மேதகு ஆயர் அருட் கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு)

நினைவுப் பேருரை: உயர்திரு C.V. விக்னேஸ்வரன்
(இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர்)

பொருள் : 'விடிவை நோக்கி'

நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் க.செல்வராசா
அவர்களின் மாமன்

### துரைசாமி துரைநாயகம்



அவர்களது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கோக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை,
கோக்குவில்.
(73478)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
22
08
1937



உதிர்வு
26
03
2008

### திருமதி அல்பிரட் றீத்மலர்
(புஸ்பம்)

ஒளிவிடும் சுடராக ஓங்கி நின்ற குலவிளக்கே என் அன்பு அம்மாவே!
பாரியார் பிரிவு கண்டு பதறி மனம் துடித்துப் பாரினிலே
வாழப் பிரியமின்றி நீரும் அவர் சென்ற திசை நோக்கி ஆவலுடன் சென்றீரோ!
எம்மோடு நீர் வாழ்ந்த காலங்கள் அத்தனையும் கனவாக மாறி
எமைக் கசக்கிப் பிழியுதம்மா உம் வதனம் கண்டிலே எம் துன்பம் தீரும் அம்மா,
எம் வாழ்வில் நீர் எமக்கு உறுதுணையாய் இருந்தீரே!
இதனைப் பொறுக்காத கூற்றுவன்தான் உமை அழைத்தும் சென்றானோ!
உம் பிரிவால் துடிதுடிக்கும் பிள்ளைகள் குமுறும் குரலோசை உம் செவிக்கு எட்டாதோ?

334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
(73488)

## மானிப்பாய் இந்துவில் புனரமைப்புப் பணி

வலி.தென்மேற்கு, ஏப்.25

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவர் விடுதி, சமையல் கூடம் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இப் புனரமைப்புப் பணியை மேற்கொள்வதற்காக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இரண்டு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என கல்லூரி அதிபர் தெரிவித்தார். (202-135)

## பாடசாலைகளில் விவசாய ஆய்வுகூடங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.25

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளில் விவசாய ஆய்வு கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் ஆகிய பாட சாலைகளிலேயே விவசாய ஆய்வு கூடங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டன. (202-207)

## இலக்கியக் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு, ஏப்.25

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபை நடத்தும் இலக்கிய கருத்தரங்கு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் பிரதம அதிதியாக யாழ். பிரந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார்.


பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருபாசக்தி சிவராசா ''ஈழத்து இலக்கிய வரலாறு'' என்ற விடயம் பற்றியும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியர் நா.பாலகிருஷ்ணன் ''இலக்கிய நயம்'' என்ற விடயம் பற்றியும் விரிவுரை நிகழ்த்துவார்கள். (202-135)


## விற்பனைக்கு

HERO STREAM 49CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
060 221 8679, 077 6146501
(73485)


## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணபாபு



உடுப்பிட்டி, நாவலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணபாபு (13.04.2008) ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் அகாலமரணம் எய்தினார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை- மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் விஜிதாவின் அன்புக் கணவரும் லோசனா, ராஜா, பிரபு, சர்மினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மநாதன், காந்திகா, பாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாதுலிங்கத்தின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.04.2008) வியாழக்கிழமை டென்மார்க்கில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவடி,
உடுப்பிட்டி.
(சி/552538)

தகவல்:
பிரபு.

### திருமதி குலநாயகம் விக்னேஸ்வரி



24, விபுலானந்தர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி குலநாயகம் விக்னேஸ்வரி அவர்கள் (23.04.2008)புதன் கிழமை காலமானார்.

அன்னார் A.C.குலநாயகத்தின் அன்பு மனைவியும் மோகன் (யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர்), ரமேஷ், கலா, யாமினி, அனுசா ஆகியோரின் அன்புத் தாயும் சேகர், இராஜேந்திரா, ஜெயந்தி, சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2008) முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனத்துக்காக கொழும்புத்துறை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(78488)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

### திருமதி கனகம்மா இராசையா
(பூரணம் ஆச்சி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இராசையா நேற்று முன்தினம் (23.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் சின்னமணி (கனடா), மனோகரன் (கனடா), மகேசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தொ.பே.: 021 4590594
(73487)

தகவல்:
சு.சிவநேசன்
(பேரன் பொறியியலாளர், C.T.B கோண்டாவில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழக சட்டப் பேரவையின் தீர்மானம் கூறும் செய்தி

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதிப் பேச்சுகள் மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்கான முன் முயற்சிகளை இந்தியா ஆரம்பிக்க வேண்டும்.

- இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்று ஏகமனதாக தமிழக சட்டப் பேரவையில் குரல வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தமிழகத்தின் ஒட்டுமொத்தக் குரலாக வெளிப்பட்டிருக்கும் இந்தக் கருத்து இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படக்கூடியது. அதற்கான காரணங்கள் பலவுள்ளன.

இந்திய மத்திய அரசில் ஒரு தனியான கட்சி ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்திருக்கும் நிலைமை இன்று இல்லை. இன்றைய மத்திய அரசைத் தலைமை வகித்து நடத்தும் இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியிடம் கூட அத்தகைய வலிமை இல்லை. அக்கட்சி ஆட்சிப்பலத்தைப் பெறுவதற்கு மாநிலக் கட்சிகளின் ஆதரவில்தான் தங்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியுள்ளவையாக மாநிலக் கட்சிகள் மாறிவிடுகின்றன.

இன்றைய நிலையிலும் தமிழகத்தின் பிரதான ஆளும் தரப்பான தி.மு.கவும், பிற அதன் தோழமைக் கட்சிகளும் இவ்வாறு மத்திய அரசின் உயிர்வாழ்வைத் தீர்மானிக்கும் 'பாசக் கயிற்றை' தமது வலிமையான ஆயுதமாகக் கையில் வைத்திருக்கின்றன.

இப்படி இந்திய மத்திய அரசில் ஆட்சி நடத்தும் தரப்பு தமிழக மாநிலக் கட்சிகளின் தயவில் தங்கி நிற்கின்றது என்றால், மறுபுறம் மாநிலத்தில் ஆளும் பிரதான தரப்பான தி.மு.கவின் கதியும் அதே நிலைமைதான். தமிழக சட்டப் பேரவையில் தனித்துத் தனது வலிமையை நிலைநாட்ட முடியாத சிறுபான்மை அரசான கலைஞர் கருணாநிதியின் ஆட்சி நிர்வாகம், தனது கூட்டமைப்பில் உள்ள பிற தோழமைக் கட்சிகளின் ஆதரவில் காலத்தை ஒருவாறு கொண்டிழுக்கின்றது.

- இவ்வாறு தோழமைக் கட்சிகளின் ஆதரவில்தங்கி நின்று தமிழக மாநில அரசும், தமிழக மாநில அரசுக்கு ஆதரவு அளிக்கும் தோழமைக் கட்சிகளின் கூட்டமைப்பின் தயவில் தங்கி நின்று இந்திய மத்திய அரசும் தமது ஆட்சியைத் தொடரும் ஒரு விநோதமான புறச்சூழ்நிலையிலேயே மேற்படி ஈழத் தமிழர் பிரச்சினையை ஒட்டிய முக்கிய தீர்மானம் ஒன்று தமிழக மக்களின் ஒட்டுமொத்தக் குரலாக வெளிப்பட்டிருக்கின்றது.

எனவே தமிழக மக்களின் சட்டப்பேரவைப் பிரதிநிதிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஏகமனதான தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு, அதனைச் செயற்படுத்த வேண்டிய கடப்பாடு தமிழக மாநில அரசையும், இந்திய மத்திய அரசையும் சார்ந்துள்ளது. அதனைத் தமது அதிகாரத்தையும் வலிமையையும் பயன்படுத்தி செயலுருக் கொடுப்பது அக்கட்சிகளின் கட்டாய கடமையாகும்.

சரி. இனி இத்தீர்மானத்தின் ஆழத்தைச் சற்றுப் புரிந்துகொள்ள முயல்வோம்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் வலுவான ஈடுபாடு காட்டி - சம்பந்தப்பட்டு - ஏன் சிக்கலில் வீணாக மாட்டிக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனைப் போக்குக் காரணமாக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் பட்டும் படாமலும் நடந்துகொண்டு ஒரு நழுவல் வழுவல் போக்கையே தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இதுவரை வெளிப்படுத்தி வந்தார். இது அப்பட்டமாக - வெளிப்படையாக - தோற்றிய ஒரு செயற்போக்குத்தான். 'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் நிலைப்பாடே தமிழக அரசின் நிலைப்பாடும்' - என்ற விநோத கருத்தியல் நிலைப்பாட்டைத் தமது இந்த நழுவல் போக்குக்கு ஆதாரமாக முன்வைத்தபடி சமாளித்து வந்தார் கலைஞர்.

அவரது இந்த நிலைப்பாட்டுக்கு ஆப்பு வைத்திருக்கின்றது தமிழக சட்டப் பேரவையின் மேற்படி தீர்மானம். 'மத்திய அரசின் நிலைப்பாடுதான் மாநில அரசின் நிலைப்பாடு' - என்ற கருத்தைப் புறக்கணித்து விட்டு, அதற்கு அப்பால் சென்று இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுமூலம் சமாதானத்தீர்வு காண்பதற்கான முன் முயற்சிகளை எடுக்கும்படி, இந்திய மத்திய அரசுக்கு வழிகாட்டல் விடுத்திருக்கின்றது தமிழக சட்டப்பேரவை. எனவே, இனிமேலும் மத்திய அரசின் முடிவே தமிழக அரசின் முடிவு என்றும் சாக்குப் போக்குக் காரணம் சொல்லி தமிழக அரசுத் தலைமை இவ்விடயத்தில் தள்ளிநிற்க முடியாது. ஆக்கபூர்வமான செயற்போக்கை இவ்விவகாரத்தில் இனி அது வெளிப்படுத்தியேயாக வேண்டும் என்ற அந்தக் கட்டாயத்தை இத் தீர்மானம் ஏற்படுத்திவிட்டது.

அடுத்ததாக இத்தீர்மானம் வலிமையான செய்தி ஒன்றையும் இந்திய அரசுத் தலைமைக்கு முன்வைத்திருக்கின்றது. பேச்சு மூலமான தீர்வுக்கு முன்முயற்சி எடுக்குமாறு மத்திய அரசைக் கோருவதன் மூலம், இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித் தீர்வைக் காணும் முயற்சிகளுக்கு எதிரான தனது எதிர்ப்பை இத்தீர்மானம் வெளிப்படுத்தி நிற்கின்றது. அதாவது, இராணுவ வழித் தீர்வுக்கான எத்தனங்களைத் தடுத்து நிறுத்தி, அதன்மூலம் பேச்சு மூலமான சுமுக உடன்பாட்டை எட்ட நடவடிக்கை எடுங்கள் என்ற கருத்தை இத்தீர்மானம் சொல்லாமல் சொல்லுகின்றது.

எனவே ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தனது யுத்த நடவடிக்கைகள் மூலம் இராணுவத் தீர்வுகாண எத்தனிக்கும் இலங்கை அரசின் போர்வெறிப் போக்கைத் தடுத்து நிறுத்துமாறும்-

அத்தகைய போர்த்தீவிரப் போக்குக்கு உதவும் எத்தகைய நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் நிறுத்துமாறும் -

இந்திய மத்திய அரசை இத்தீர்மானம் வற்புறுத்துகின்றது என்பது இதில் உட்கிடக்கையாக பொதிந்து கிடக்கும் அம்சங்களாகும்.

அடுத்ததாக இத்தீர்மானம் கோரும் 'பேச்சு மூலமான தீர்வு' பற்றிய விடயத்துக்கு வருவோம்.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளில் ஒரு பகுதியினராகத் தமிழர்கள் அமைகின்றார்கள். ஈழத் தமிழர்களின் பிரதானமான - ஏக, அதிகாரபூர்வமான - தரப்பாக விளங்குபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். இன்றைய நிலையில் அவர்களுடன் அமைதிப் பேச்சு நடத்தாமல் இலங்கை இனப்பூசலுக்குச் சமாதானத் தீர்வு காண்பது என்பது அசாத்தியமான விடயமாகும். எனவே தமிழக சட்டப் பேரவைத் தீர்மானத்தின்படி இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கான அமைதிப் பேச்சுக்களை நடத்துவதாயின் விடுதலைப் புலிகளுடன்தான் பேச்சுக்களை நடத்தவேண்டியிருக்கும்.

ஆகவே, அத்தகைய சமாதானப் பேச்சுகளுக்கான ஆக்க பூர்வமான முன்னெடுப்புகளை தமிழக சட்டப்பேரவைத் தீர்மானத்துக்கு அமைய இந்திய அரசு மேற்கொள்வதாயின், அத்தகைய பேச்சுகளில் புலிகளை ஈடுபடுத்துவதையும் தனது செயற்பொறுப்பாக இந்திய மத்திய அரசு முன்னெடுக்க வேண்டிவரும்.

அப்படிச் செய்வதாயின் -

கடந்த இரு தசாப்த காலமாக வெளிப்படுத்தி வந்தமை போன்று *'புலிகள் இயக்கம் தீண்டத்தகாத சக்தி - தொடர்பு கொள்ளத் தகுதியற்ற அமைப்பு - பயங்கரவாத இயக்கம்'* என்றெல்லாம் கருதி, ஒதுக்கி அல்லது ஒதுங்கி நிற்கும் போக்கை இந்தியா இனியும் தொடர்ந்தும் பின்பற்றவே முடியாது.

இலங்கை விடயத்தில் - குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் - தன்னுடைய தவறான கருத்தியல் நிலைப்பாட்டை இந்திய அரசு மாற்றிக்கொண்டு ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும் என்பதையே தமிழக சட்டப்பேரவையின் இந்தத் தீர்மானம் சொல்லாமல் சொல்லுகின்றது.

தமிழக மக்களின் இந்த ஒட்டுமொத்தக் கருத்தை உள்வாங்கிக் கொண்டு, அந்த மக்களின் பிரதிநிதிகளின் தயவில் ஆட்சியதிகாரத்தில் கொலு வீற்றிருக்கும் இந்திய மத்திய அரசு தனது பாதையைப் புதுப்பித்து, திருத்தி, சரிசெய்து கொள்ளுமா? காலம்தான் பதில் சொல்லும்.

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு சிங்கள, முஸ்லிம் மாணவர்கள்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஏப். 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இவ்வருடம் முதல் சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கடந்த இரு வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்திருக்கிறார்.

முன்னதாக யாழ். பல்கலைக்கழகத்திற்கு சிங்கள,முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டபோதும் அவர்கள் அங்கு செல்வதை நிராகரித்த காரணத்தினால் வேறு பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கப்பட்டதாகவும் பேராசிரியர் தெரிவித்தார்.

பேராதனை,ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு அடுத்தபடியாக இவ்வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கே கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தின் 30 பயிற்சி நெறிகளுக்காக 1,925 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள் அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியிருந்தனர். பல்கலைக்கழக மாணவர் அனுமதியின்போது இன விகிதாசாரம் பின்பற்றப்படவேண்டுமென இந்த சந்திப்பின்போது ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

# மேலும் இருபத்தையாயிரம் மக்கள் மன்னார் மாவட்டத்தில் இடம்பெயரலாம்

## அரச அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தீவிரமடையும் பட்சத்தில் மேலும் 25 ஆயிரம் பேர் இடம்பெயரலாம் எனத் தெரிவித்துள்ள மாவட்ட அரச அதிபர் ஏ.நிக்கிலாஸ்பிள்ளை, கடும் பாதுகாப்பு நடைமுறை காரணமாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விநியோகங்கள் வந்து சேர்வது தாமதமடைவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐ.ஆர்.ஐ.என். செய்திச் சேவைக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாகக் கடந்த சில மாதங்களில் 16 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக மேலும் 25 ஆயிரம் பேர் உள்நாட்டில் இடம்பெயரலாம் என்ற அடிப்படையில் இடர்காலத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாகவும் நிக்கொலஸ்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மாந்தை மேற்குப் பகுதியில் 40 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். இப்பகுதியிலேயே கடுமையான மோதல்கள் இடம்பெறுகின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ள நிக்கிலாஸ்பிள்ளை, இவர்களில் அநேகமானவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர், மோதல் தொடர்ந்தால் அவர்கள் இன்னமும் வடக்காகச் செல்லும் சாத்தியமுள்ளது. அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி அவர்கள் தப்பிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தெரிவித் துள்ளார்.

மன்னாரில் களமோடை என்னும் பகுதியில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம் ஒன்றை அமைப்பதற்கான பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதிக்கு மனிதாபிமான அமைப்புகள் காத்திருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிக்கு மேலும் பல உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வரலாம். மனிதாபிமான அமைப்புகள் இதுவரை அவசர விநியோகத்தை மாத்திரம் மேற்கொண்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (சி)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சகஸ்ர கலச சங்காபிஷேகம் திங்களன்று

யாழ்ப்பாணம்.ஏப்.25

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டு100ஆண்டுகள்நிறைவடைவதை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை பஞ்சகுண்ட அஷ்டோத்திர சகஸ்ர கலச சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாடு, புண்ணியாவாசனம், யாகபூசை, மகா பூர்ணாகுதி என்பன இடம்பெற்று சுந்தரேஸ்வரப்பெருமானுக்கும் சௌந்தராம்பிகை அம்பாளுக்கும் சகஸ்ரநாம பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும். மாலை ஐயனாருக்கு சகஸ்நாம பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும்.

திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு விஷேட திரவிய அபிஷேகம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சுந்தரேஸ்வரப் பெருமான், சௌந்தராம்பிகை, ஆண்டி கேணி ஐயனார் ஆகிய மூர்த்திகளுக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் இடம்பெற்றுத் தொடர்ந்து சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு அஷ்டோத்திர சகஸ்ர கலச சங்காபிஷேகம் சகஸ்ரநாம பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம்பெறும். (203)

# கையேடுகள் விநியோகம்

யாழ்ப்பாணம்.ஏப்.25

உயர்தர வகுப்பில் சித்திர பாடத்தைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு ஆத்திசூடி வீதி, கந்தர் மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் வழிகாட்டல் கையேடுகளை இலவசமாக வழங்கவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முதல் மாணவர்கள் நிறுவனத்தில் இக் கையேடுகளைப் பெற்றுக் கொள்ளலாம். (202)

# சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தச் செயல்திட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்.25

யாழ்.மாவட்ட சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு இயந்திர உபகரண வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென கைத்தொழில் அபிவிருத்தி சபை செயற்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் தமது கைத் தொழில் முயற்சிக்குப் பயன்படுத்தக் கூடிய இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி வசதியளிக்கும் நோக்குடன் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பயன்பெற விரும்புவோர் தமது விவரங்களுடன் 'கைத்தொழில் அபிவிருத்தி சபை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதிப் பணிப்பாளர் ஆர். ஜெயமனோகரன் கேட்டுள்ளார். (202)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 14 | 26.04.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: சஷ்டி | பி.இ.02.32வரை |
| நட்சத்திரம் : | பூராடம் |
| | பி.இ. 05.42 வரை |
| சுபநேரம் : | 02.59 - 04.29 |
| ராகுகாலம் : | 08.59 - 10.29 |

# 'வில்லிசைக் கலை' நூல்வெளியீடு

யாழ்ப்பாணம்.ஏப்.25

வில்லிசைக் கலைஞர் இராசையா ஸ்ரீதரன் எழுதிய 'வில்லிசைக் கலை' நூலின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடமிருந்து நூலைப் பெற்று கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் வெளியிட்டுவைத்து உரை நிகழ்த்துவார். (202)

# பரிசளிப்பு விழா

வலி.வடக்கு.ஏப்.25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழா நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கமும் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை மருந்தாளர் திருமதி செல்வராணி பாலசிங்கமும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராக முன்னாள் தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.லோகநாதன் கலந்துகொள்வார். (202-86)

# கலந்துரையாடல்

வலி.வடக்கு.ஏப்.25

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பதிவு செய்யப் பட்ட கழகங்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (202-86)

# தடகள விளையாட்டு

வலி.வடக்கு.ஏப்.25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று காலை 8.30 மணி முதல் இரண்டாவது நாளாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (202-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வலயக் கல்வி அலுவலகத்தில்
பதவி நிலை அலுவலராக, பதில் நிர்வாக
உத்தியோகத்தராக இருந்து எமக்கு
வழிகாட்டிய

**திரு.சந்திரசேகரம் சந்திரயோகன்**

அவர்கள் 2006.07.01ஆம் திகதி முதல் மாகாண
முகாமைத்துவ உதவியாளர் சேவையின்
அதிசிறப்புத் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று
பருத்தித்துறை நகராட்சி மன்றத்திற்கு நிர்வாக
உத்தியோகத்தராக இடமாற்றம் பெற்றுச்
செல்வதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி. (சி/552541)

தாபனக் கிளை உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவிருப்பதால் சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(73491)

**செயலாளர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2006 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில 7A2BC
பெறுபேறு பெற்று யூனியன் கல்லூரியில்
முதன்மை மாணவனாகத் திகழ்ந்த

**செல்வன் சிவானந்தசோதி கோபி**

2007 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10A
பெறுபேறு பெற்று இராமநாதன் கல்லூரியில்
முதன்மை மாணவியாகத் திகழ்ந்த

**செல்வி சிவானந்தசோதி நிரூபா**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர்கள் கல்வியிற் சிறந்து சகல வளங்களும் பெற்று
உயர்வடைய சிவபூதவராயப் பெருமானும் புளியடி
வைரவப் பெருமானும் அருள்புரிய வேண்டுமெனப்
பிரார்த்திப்பதுடன் இருவருக்கும் ஒளிமயமான
எதிர்காலம் அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

திருமதி விமலாவதி ஜெயராசா,
திருமதி லீலாவதி இராஜேந்திரம் (அத்தைமார்).

(73490)

## ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கவனத்திற்கு!

வர்த்தக நோக்கில் எனது பெயரில் 5ஆம் தர புலமைப் பரிசில் வழிகாட்டிக்கான நூலொன்று **"மலிபன் தெரு, கொழும்பிலிருந்து விமானம் மூலம் வந்து விற்பனையாகிறது"** என்ற போலியான தகவலுடன் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. இப்படி போலியான தரமற்ற நூல்களை எனது நூல்கள் என விற்பனை செய்வதால் எனது பெயருக்கு களங்கம் ஏற்படுகின்றது. எனவே இதற்காக மிகவும் வருந்துகிறேன்.

**எனது வெளியீடுகளாக... ஆண்டு 2008இல்**

- ★ ஏஞ்சல் (புலமை வழிகாட்டி)
- ★ விவேகம் (மாதிரி வினாத்தாள்)
- ★ சுற்றாடல் சார் செயற்பாடுகள் - தரம் 1-5
- ★ தமிழ்மொழி (புலமை வழிகாட்டி) - தரம் 1-5
- ★ கணிதம் (புலமை வழிகாட்டி) - தரம் 1-5

எனும் 5 விதமான நூல்களை மட்டுமே ச.சந்திரகுமார் ஆகிய நான் வெளியீடு செய்துள்ளேன் என்பதை தெளிவுபடுத்துகின்றேன்.

எனது நூல்கள் அனைத்தும் மட்டக்களப்பு, **"ராஜாஸ் புத்தக நிலையம்"** மட்டுமே வெளியீடு செய்யும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**ந.சந்திரகுமார்,**
515, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
065 - 2226698

மேலதிக விவரங்களுக்கு:
**ராஜாஸ் புத்தக நிலையம்,**
111, மெயின் வீதி, மட்டக்களப்பு.
065 - 2222371

(சி/552533)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கணேசன்

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி கணேசன் 22.04.2008 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அராலி கந்தையா கணேசனின் அருமை மனைவியும் சிற்சபேசன், சதாசிவன், சிவனேசன் ஆகியோரின் அன்புத் தாயும் உஷா, பிங், ராஜி ஆகியோரின் அருமை மாமியும் நடேசன் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சதாசிவம், மகேஸ்வரி, மகேசன், வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

61, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (73495)

தகவல்:
**ந.சிவசுப்பிரமணியம்.**

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.25

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி சீ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். (202)

## நூல்கள் சேகரிப்பு

வலி.தென்மேற்கு,ஏப்.25

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபை கிடைத்தற்கரிய தரம் வாய்ந்த நூல்களை பொதுமக்களிடமிருந்தும் நலன்விரும்பிகளிடமிருந்தும் திரட்டி வருகின்றது.

கிடைத்தற்கரிய நல்ல நூல்களை தமது வீடுகளில் வைத்திருப்போர் அவற்றை பிரதேச சபையின் மானிப்பாய், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய உப அலுவலகங்களின் நூலகங்களுக்கு அன்பளிப்பு செய்து உதவுமாறு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கேட்டுள்ளார். (202-135)

## முன்னோடிக் கருத்தரங்கு

நாவற்குழி,ஏப்.25

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு இவ்வாண்டு தோற்ற இருக்கும் மாணவர்களின் நலன்கருதி முன்னோடிக் கருத்தரங்கு ஒன்றை கைதடி மத்தி வளர்மதி கல்விக்கழகம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

இம்முன்னோடிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற விரும்பும் மாணவர்களை குறிப்பிட்ட நேரத்திற்கு பாடசாலை மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு வளர்மதி கல்விக்கழகப் பொறுப்பாளர் த.பாஸ்கரன் கேட்டுள்ளார். (202-288)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

இல.150, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 6335

(73496)

## மணமகள் தேவை

1955ஆம் ஆண்டு, உத்தராடம் நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, வெளிநாட்டு P.R. உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும்.

**துர்க்கா திருமண சேவை,**
இல.09, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
சகல மணமக்களும் எம்மிடம் உண்டு.
தொ.பே.: 021 4591417. (73489)

## பனை அபிவிருத்திச் சபை

### பழைய இயந்திரங்கள், தளபாட உதிரிப்பாகங்கள் மற்றும் அலுவலக பாவனைக்கான உபகரணங்கள்

### விற்பனை

பனை அபிவிருத்திச் சபையினால் பயன்படுத்தப்பட்ட பழைய வழக்கிழந்த இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், தளபாடங்கள், இரும்புத் தளபாடங்கள் மற்றும் அலுவலக பாவனைக்கான உபகரணங்கள் கேள்வி மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. யாழ்.கண்டி வீதி, இல.53இல் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் பிரிவு அலுவலகத்தில் மேற்படி பொருள்களை நேரில் பார்வையிடலாம். கேள்விகளை 10.05.2008ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தொ.பே.
021 222 2034

**ச.சிவதாசன்**
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/552544)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பிளாஸ்ரிக் அடையாள அட்டை வழங்கல்

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்குவதற்கென பிளாஸ்ரிக்கிலான அடையாள அட்டைகளைச் செய்து வழங்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் 250 ரூபாவினைச் செலுத்தி உதவிப் பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அரக்கிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 14.05.2008 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் *'பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்'* எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் *'அடையாள அட்டை வழங்கலுக்கான விண்ணப்பம்'* எனக் குறிப்பிடவும். விண்ணப்பதாரிகள் 14.05.2008 பி.ப. 2.30 மணிக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் வேளை சபா மண்டபத்திற்கு சமுகம் தரலாம். பல்கலைக்கழக கொள்வனவுச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/552545)

**- பதிவாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றுணர்ந்தொழுகு"

## யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

## நூற்றாண்டு விழா

### (1908-2008)

1908ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இன்றுவரை அரிய கல்விப் பணியுடன் சமூகப் பணியும் ஆற்றி ஆளுமைமிக்க உயர்ந்த பிரஜைகளை உருவாக்கிய இவ்வித்தியாலயத்தின் சிறப்பினை நன்றியுடன் எண்ணுகிறேன். பெருமை கொள்ளும் பல இதயங்களுடன் நானும் இணைந்து வித்தியாலயம் மேலும் சிறந்து சாதனைகள் படைக்க இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

மூளாய் வீதி,
மூளாய், சுழிபுரம். (சி/552539)

**சோ.விபுலன்**
பழைய மாணவன்.

## யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் -2008

**இடம்: யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**
*(பிரார்த்தனை மண்டபம்)*

**காலம்: 15.05.2008 (வியாழக்கிழமை)**

**நேரம்: பிற்பகல் 2 மணி**

மேற்படி கூட்டத்தில் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 08.05.2008இற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்,**
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

**செயலாளர்.**

(73480)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
திருமதி பு.தயானந்தராஜன் அவர்களின் மாமியார்

**திருமதி ஐயம்பிள்ளை சரஸ்வதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி/552543)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்
14 ★ 09 ★ 1931



விண்ணுலகில்
26 ★ 03 ★ 2008

**திருமதி இரத்தினம் பஞ்சவர்ணம்**

25.04.2008

அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லை
ஆறுதல் வார்த்தைகள் கூற யாருமில்லை
எம் குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்த தாயே
எம்மை விட்டு விண்ணுலகம் சென்றீரே.

வங்கியடி,
இணுவில் கிழக்கு.

நீங்காத நினைவோடு துயருறும்:
பிள்ளைகள், சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(73494)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்,

சர்வசித்து ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தோராம் நாள் (03.04.2008) அதிகாலை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்**

*(யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளரும் (முன்பள்ளி), இலங்கைத்தமிழர்ஆசிரியர்சங்கத்தின்சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளரும்)*

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அஞ்சலி நிகழ்விலும் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

40/2, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி/552542)

**குடும்பத்தினர்.**

# பரபரப்பான ஆட்டத்தில் சென்னை கிங்ஸ் வெற்றி
# மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மீண்டும் ஏமாற்றம்


மத்தியூ ஹைடன்

சென்னை, ஏப்.25

நெஞ்சம் படபடத்த போட்டியில் ஜோகிந்தர் சர்மா கடைசி ஓவரை பதற்றப்படாமல் வீச, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, மும்பை இந்தியன்ஸ் அணியை 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

இதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் இரண்டாவது வெற்றியை சென்னை கிங்ஸ் பதிவு செய்தது. சச்சின் இல்லாத மும்பை இந்தியன்ஸ் அணியின் போராட்டம் மீண்டும் வீணானது. ஹைடன் மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோரின் அதிரடி ஆட்டம் சென்னை அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தது.

ஐ.பி.எல். ருவென்ரி/20 தொடர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடக்கிறது. சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, மும்பை இந்தியன்ஸ் அணியைச் சந்தித்தது. காயம் காரணமாக இப்போட்டியிலும் சச்சின் இடம் பெறவில்லை. இதையடுத்து மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பொறுப்பை மீண்டும் ஹர்பஜன் ஏற்றார். நாணயச் சுழற்சியில் வென்ற ஹர்பஜன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

சென்னை அணிக்கு ஹைடன், பார்த்தீவ் பட்டேல் ஆகியோர் அதிரடித் தொடக்கத்தை அளித்தனர். பொலக் வீசிய முதல் ஓவரில் ஒரு பவுண்டரி விளாசினார் பார்த்தீவ். நெஹ்ரா வீசிய அடுத்த ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். பின்னர் ஹைடன் தன் பங்குக்கு அதிரடி காட்டினார். பொலக் வீசிய மூன்றாவது ஓவரில் வாணவேடிக்கை காட்டிய இவர் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் விளாசினார். உதிரிகள் மூலமாக 4 ஓட்டங்கள் கிடைக்க, இந்த ஓவரில் மட்டும் 18 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

இந்த நேரத்தில் நெஹ்ரா வீசிய பந்தில் பார்த்தீவ்(14) வெளியேறினார். அடுத்து வந்த மைக்கல் ஹசேயும்(5) ஏமாற்றினார். கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு எதிராக அதிவேக சதம் அடித்த இவர் இம்முறை 5 ஓட்டங்களுடன் குல்கா்னி பந்தில் வீழ்ந்தார்.

இதற்கு பின் ஹைடன், சுரேஷ் ரெய்னா இணைந்து பட்டையைக் கிளப்பினர். மிகவும் விவேகமாக ஆடிய இவர்கள் அணியின் ஓட்டஎண்ணிக்கையைப் படுஜோராக உயர்த்தினர். ஒரு கட்டத்தில் ரெய்னாவின் ஆட்டம் ஹைடனை மிஞ்சியது. ஹர்பஜன், பிராவோ பந்தில் தலா ஒரு சிக்ஸர் அடித்தார். பின்னர் யெலிகாட்டி ஓவரில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் விளாசினார். நய்யார் வீசிய 14ஆவது ஓவரில் ஹைடன், ரெய்னா தலா ஒரு இமாலய சிக்ஸர் அடித்தனர். அதிரடியாக அரைச்சதம் கடந்த ரெய்னா 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கோட்டேவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தனது அதிரடியைத் தொடர்ந்த ஹைடன், மின்னல் வேகத்தில் அரைச்சதம் கடந்தார். இவருக்கு அணித்தலைவர் டோனி சிறப்பாக ஒத்துழைக்க கடைசிக் கட்டத்தில் ஓட்ட எண்ணிக்கை ஜெட் வேகத்தில் உயர்ந்தது. பிராவோ வீசிய 16ஆவது ஓவரில் டோனி 2 பவுண்டரிகள் அடிக்க சென்னை ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். குல்கா்னி வீசிய 18ஆவது ஓவரில் ஹைடன் இரண்டு மற்றும் டோனி ஒரு பவுண்டரி அடித்தனர்.

சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஹைடன் 81 ஓட்டங்களுடன் (12 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) ஹர்பஜனின் துல்லிய எறிதலுக்குட்பட்டு 'ரன் அவுட்' ஆனார். அணித் தலைவர் டோனி 30 ஓட்டங்களுடன் வெளியேறினார். 20 ஓவர்கள் நிறைவில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களை எடுத்தது. ஓரம்(5), பத்ரிநாத்(2) ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடினஇலக்கைவிரட்டியமும்பைஇந்தியன்ஸ் அணிக்கு ஆரம்பமே மோசமாக அமைந்தது. முதல் ஓவரில் பத்ரிநாத்தின் சிறப்பான களத்தடுப்பால் ரோஞ்சி(2) 'ரன் அவுட்' ஆனார். இதற்குப் பிறகு ஓரம் ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்து அதிரடியைத் தொடக்கிய ஜெயசூரியாவால் அதிகநேரம்தாக்குப்பிடிக்கவில்லை. இவர் கோனியின் பந்தில் 20 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அடுத்து வந்த உத்தப்பா விளாசித் தள்ளினார். ஓரம் வீசிய 5ஆவது ஓவரில் 3 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் சேர்த்து மொத்தமாக 19 ஓட்டங்களை எடுத்தார். இவர் ஜோகிந்தர் சர்மா வேகத்தில் 43 ஓட்டகளுடன் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) 'போல்ட்' ஆனார். பழனி அமர்நாத்தின் பந்தில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்த பொலக், அடுத்த பந்தில் 17 ஓட்டங்களுடன் 'போல்ட்' ஆக சிக்கல் ஆரம்பமானது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பிராவோ சிறிது நேரம் அதிரடி காட்டினார். அமர்நாத் ஓவரில் 3 பவுண்டரிகள் அடித்த அவர் 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வெளியேறினார். கடைசிக் கட்டத்தில் அணித்தலைவர் ஹர்பஜன் மற்றும் நய்யார் ஆகியோர் துணிச்சலாகப் போராடினர். பழனி அமர்நாத் வீசிய 17ஆவது ஓவரில் ஹர்பஜன் ஒரு சிக்ஸர் அடித்தார். நய்யார் இரண்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடிக்க மொத்தம் 21 ஓட்டங்கள் கிடைக்க மும்பைக்கு நம்பிக்கை பிறந்தது. ஓரம் வீசிய அடுத்த ஓவரில் ஹர்பஜன் இரண்டு சிக்ஸர்கள் அடிக்க, ஆட்டத்தில் பரபரப்புத் தொற்றிக் கொண்டது. இந்நிலையில் முரளி சுழலில் ஹர்பஜன்(28) ஆட்டமிழக்கதிருப்புமுனைஏற்பட்டது.

கடைசி ஓவரில் 19 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிஎன்றநிலை. ருவென்ரி/20உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் சாதித்த ஜோகிந்தர் கையில் பந்தைக் கொடுத்தார் அணித்தலைவர் டோனி. முதல் இரண்டு பந்துகளிலும் நய்யார் இரண்டு பவுண்டரிகள் அடிக்க பரபரப்பு அதிகமானது. மூன்றாவது பந்தை 'நோ-போல்' ஆகப் போட்டார். நல்லவேளை 'பிரி-ஹிட்'இல் ஒரு ஓட்டம்தான் கொடுக்கப்பட்டது. இதற்குப் பிறகு சுதாரித்து பந்துவீசிய ஜோகிந்தர் வெற்றியை உறுதி செய்தார். மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 202 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 6 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக மத்தியூ ஹைடன் தெரிவுசெய்யப்பட்டார்.

## எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஆஸியில் நேற்று ஒலிம்பிக் ஜோதியின் ஓட்டம்


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திபெத்தியா் ஒருவா்

கான்பெரா, ஏப்.25

ஆஸ்திரேலியாவில் ஒலிம்பிக் ஜோதி தொடர் ஓட்டம் நேற்றுக் காலை அமைதியான முறையில் நடைபெற்றது. எனினும் ஒலிம்பிக் ஜோதிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திபெத்தியர்களை ஆஸ்திரேலியப் பொலிஸார் கைது செய்தனர்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடங்கும் ஒலிம்பிக் போட்டிக்கு முன்பாக ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

ஆஸ்திரேலியாவில் உள்ள கான்பெராவில் நேற்றுக் காலை விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் ஜோதியை தங்கள் கரங்களில் ஏந்தி முக்கிய வீதிகள் வழியாகச் சென்றனர். சுமார் 3 மணி நேரம் நடைபெற்ற இந்தத் தொடர் ஓட்டத்தை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர்.

பாதுகாப்புக்காக ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் சீனாவுக்கு எதிராக திபெத் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்தனர். ஆர்ப்பாட்டம் நடத்திய திபெத்தியர்களுக்கு எதிராக சீன ஆதரவாளர்களும் கோஷங்கள் எழுப்பினார்கள்.

# காசாவில் ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளை இடைநிறுத்தம் செய்ய வேண்டிய நெருக்கடிநிலை

## அப்பகுதிக்கான எரிபொருள் விநியோகத்தை இஸ்ரேல் இடைநிறுத்தியமையால்

காசா, ஏப்.25

காசாவுக்கான எரிபொருள் விநியோகத்தை இஸ்ரேல் கைவிட்டுள்ளமையால், காசாவில் தான் மேற்கொண்டுவரும் மனிதாபிமானப் பணிகளை இடைநிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மேலும் எரிபொருள் தாங்கிகளை காசாவுக்குள் செல்ல அனுமதிக்காவிட்டால், 650,000 அகதிகளுக்கான மனித நேய நிவாரணப்பணிகளை ஐ.நா.வால். கைவிட நேரிடும் என ஐ.நா. அதிகாரி ஒருவர் பி.பி.சி.க்குத் தெரிவித்துள்ளார்.

காசாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பிணக்கு தொடர்பாக விவாதிப்பதற்கென ஐ.நா. பாதுகாப்பு சபையால் கூட்டப்பட்ட கூட்டத்தில் பங்கு பற்றியிருந்த மேற்கத்தேய பிரதிநிதிகள், லிபிய தரப்பு விமர்சனத்தை அடுத்து வெளிநடப்பு செய்துள்ளார்கள்.

நாசி கொலைக் கள முகாமாக காசா மாற வேண்டுமென லிபிய பிரதிநிதி விரும்புகிறார் போலும் என அவர்கள் வெளிநடப்புச் செய்வதற்கு முன்னர் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்துள்ளார்கள். நியுயோர்க்கிலுள்ள ஐ.நா. மாநாட்டு மண்டபத்தில் இக் கூட்டம் இடம் பெற்றுள்ளது.

இதில் பங்கு பற்றியிருந்த இராஜதந்திரிகளில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளே வெளியேறியுள்ளார்கள்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது இருந்த நாசி படுகொலைகள முகாமைப் போன்று காசா உள்ளது என, ஐ. நாவுக்கான லிபிய தூதுவர் ஜியாடலா எட்டல்ஹி இதில் ஒப்புமை காட்டி கருத்து வெளியிட்டிருந்தார்.

லிபிய எடுத்துள்ள நிலைப்பாட்டால், சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளர்கள். இத்தகைய விமர்சனம், சமாதான முன்னெடுப்புகளை மென்மேலும் நகர்த்த உதவுமென்பதற்கில்லை என பிரிடிஷ் பிரதிநிதி கரின் பேர்ஸி தமது குறுகிய ஆட்சேபணை உரையில் குறிப்பிட்டுள்ளார்.

நிவாரணப் பணிகளை மேற் கொள்வதற்கும், உணவுப் பொருள் விநியோகத்துக்கும் வாகன வசதிகள் தேவை. எமது வாகன பாவனைகளுக்கு வியாழக்கிழமை (நேற்று) வரையே எரிபொருள் உண்டு என, ஐ. நா. நிவாரண முகவர் நிறுவனமான அன்வரா எச்சரிக்கை விடுத்திருந்தது.

பெட்ரோல் விநியோகம் இடம் பெறாவிட்டால், 650,000 அகதிகளுக்கான நிவாரண உணவு உதவிகளை எம்மால் தொடர முடியாமற் போய்விடும். 5 இலட்சம் மக்களின் சுகாதார நலன்களையொட்டி மேற்கொள்ளப்படும் குப்பை அகழ்வுப் பணிகளும் தடைபட்டுவிடும் என அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா. உதவிச் செயலாளர் ஏஞ்சலா கனே பாதுகாப்பு சபையிடம் தெரிவித்துள்ளார்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.03.2008 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் கந்தசாமி தர்மராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.04 .2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

பிளாக் வீதி,
சங்கானை.

(73553)

குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் சின்னராசா

(தவில் வித்துவான்- பருத்தித்துறை)



V.M வீதி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தவில் வித்துவான் மகாலிங்கம் சின்னராசா நேற்று (24.04.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நவநீதத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் 'பல்லவி' ராஜதுரை, சிவகாமி, திருமதி சு. ராசமணி, சரஸ்வதி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோரனும், ரதிதாம்பாள், சிவரஞ்ஜனி சிவாஜினி, வினோதினி, சிவகுமார் (நாதஸ்வரம்), விஜயகுமார், சதீஸ்குமார் (குட்டி-தவில்வித்துவான்கள்), சுபாஜினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகதாஸ், செல்வம் குஞ்சன்(தாவடி), பாலச்சந்திரன், செல்வக்குமரன், (பிரான்ஸ்), வர்மிளா, கௌரி, பிருந்தா (ஆசிரியை, யா/புற்றளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நகுலேஸ்வரி (கைதடி), அமரர் ராமகிருஷ்ணன்(நாதஸ்வரம்), ராமதாஸ் (நாதஸ்வரம்), அமரர் நம்பிராசா (நாதஸ்வரம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04..2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னப்பிள்ளையார் கோவிலடி,
வி.எம்.வீதி,
பருத்தித்துறை
077 9123075
077 9180474

தகவல்:
M.S.சிவகுமார்
M.S.விஜயகுமார்
M.S.சதீஸ்குமார்(குட்டி)

(73554)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுகிய காலத்தில் இராணுவ வெற்றியை ஈட்டும் அரசின் எதிர்பார்ப்பு தகர்ந்தது

## பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, ஏப்ரல் 25

இராணுவத்திற்கு விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியுள்ள பாரிய இழப்புகளைத் தொடர்ந்து குறுகிய காலத்திற்குள் இராணுவ வெற்றியை பெறும் அரசின் எதிர்பார்ப்பு தகர்ந்து போயுள்ளது என பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்தத்திலிருந்து 2007இல் விலகிய இராணுவத் தலைமை, ஆறு மாதத்திற்குள் விடுதலைப் புலிகளை அழிக்கப்போவதாக சூளுரைத்தது.

புதன்கிழமை ஏற்பட்ட படுதோல்வியானது விடுதலைப் புலிகளை இலங்கை அரசு குறைத்து மதிப்பிட்டுள்ளதையே புலப்படுத்தியுள்ளதாக இராஜதந்திரிகளும், ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் எதிரியை குறைத்து மதிப்பிடும் கலாசாரத்தையே காணமுடிகின்றது என தெரிவித்துள்ள பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 'வரலாறு மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவம் தனது கடந்த கால தவறுகளிலிருந்து பாடம் கற்கவில்லை' எனத் தெரிவித்துள்ளார்.

உடனடி இராணுவ வெற்றி குறித்தான கணிப்பீடுகளால் மக்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்தது. அதனால் இராணுவத்தில் பலர் இணைந்து கொண்டனர்.

எனினும் யுத்த முனைகளிலிருந்து எதிர்மறையான செய்தி வெளியாக தொடங்க படையினரின் எண்ணிக்கை குறைவடைந்தது டன் தப்பியோடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

முகமாலையில் பாரிய மோதல் இடம்பெறுவதற்கு முதல் நாள் இராணுவம் தப்பியோடியவர்களுக்கு பொது மன்னிப்பை வழங்கியிருந்தது.

'புதன்கிழமை மோதல் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதாரத்தில் மாத்திரமல்ல, படைக்கு ஆட்சேர்ப்பதிலும் அது பிரச்சினைகளை கொண்டு வரும்' என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இன்னமும் 3000 புலிகள் மாத்திரமே உள்ளனர் என்று இவ்வருடம் தெரிவித்துவந்த இராணுவத்தின் தலைமைக்கு இது பாரிய நெருக்கடியாக அமைந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு இவ்வருடத்தில் ஏற்கனவே 3125 விடுதலைப் புலிகளை கொன்றுள்ளதாக தெரிவித்தது.

எனினும் விடுதலைப் புலிகள் கிழக்கிலிருந்த தமது உறுப்பினர்களை வரவழைத்து வடக்கை பலப்படுத்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ள ஆய்வாவளர்கள், இராணுவம் தெரிவிப்பது போன்று விடுதலைப் புலிகள் அழிக்கப்படவில்லை என்கின்றனர்.

**யுத்தத்தில் தாம் வெல்லப்போவதாக அரசு மக்களை நம்பவைத்தது**

'வடக்கில் மூன்று முனைகளை திறந்துள்ள போதிலும், இராணுவத்தினரால் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் செல்ல முடியாதுள்ளது. பாதுகாப்பு படையினர் தமது அதி உச்ச படைப்பலத்தை பயன்படுத்தி வருகின்றனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அரசு மக்களின் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. யுத்தம் வெல்லப்படுவதாக நம்ப வைத்துள்ளது' என சுட்டிக்காட்டியுள்ள ஆய்வாளர் ஒருவர், தற்போது அரசினால் அதனை காப்பாற்ற முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

'பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைக்காக அதிக விலை செலுத்துகின்றனர். இதற்காக அவர்கள் தியாகம் செய்ய தயாராகவுள்ளனர். இராணுவம் சிறப்பாக செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள், மக்களை நம்பவைத்தது போன்று விடுதலைப் புலிகள் பலவீனமடையவில்லை என்பதை புலப்படுத்துகின்றது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புலிகளின் சிறந்த தந்திரோபாயம்**

விடுதலைப் புலிகளின் தந்திரோபாயத்திற்கு இராணுவத்தினர் பலியாகிவிட்டனர். இவ்வாறு நடைபெறுவது முதல்தடவையல்ல என சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர், விடுதலைப் புலிகள் சிறந்த தந்திரோபாயங்களை பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மிகத் திறமையான தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் இராணுவ தளபதி ஜெரி - டி - சில்வா, 'வடக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் அதேவேளை தெற்கில் தற்கொலைத் தாக்குதலை தடுக்க வேண்டியுள்ளதால் இராணுவம் அகலகால்வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இராணுவத்திற்கு இதற்கான ஆட்பலம் போதாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பானது இலங்கையில் இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு சாத்தியமில்லை என்பதை புலப்படுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-சி)

# கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பரீட்சைக்கு சகலரும் தோற்ற வேண்டியதில்லை

## வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

அச்சுவேலி, ஏப்.25

கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சித் தேவைகளை அறிந்து கொள்வதற்காக நாளை நடத்தப்படவிருக்கம் பரீட்சைக்கு குறித்த பாடங்களைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தோற்ற வேண்டியது அவசியம் இல்லை. வலயக்கல்விப் பணிப்பாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளவர்கள் தோற்றவேண்டும். சொந்த விருப்பத்தின் பேரில் ஏனைய ஆசிரியர்களும் தோற்றலாம்.

வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். ''மேற்படி பரீட்சை ஆசிரியர்களுக்கான பயிற்சித் தேவையை அறிந்து அவர்களுக்கும் மேலதிக பயிற்சிகளை வழங்குவதற்காக நடத்தப்படுகின்றது.

கணித, விஞ்ஞான பாடங்களின் அடைவு மட்டம் குறைவான பாடசாலை ஆசிரியர்கள் பரீட்சைக்கு தோற்றவேண்டும். பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்கள் வலயமட்டத்தில் கண்டறியப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர்களினால் அடையாளம் காணப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் தோற்ற வேண்டும். அவ்வாறு தோற்றும் ஆசிரியர்களினால் பயிற்சித் தேவைகள் பரீட்சைக்காக இனங் கண்டறியப்படும். அதன்பின்னர் குறிப்பிட்ட தேவைகள் உள்ள ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சிகள் மற்றும் பின்னூட்டல்கள் வழங் கப்படவுள்ளன.

பரீட்சைக்கு தோற்ற வேண்டிய ஆசிரியர்கள் அவர்கள் கற்பிக்கும் பாடசாலைகள் தொடர்பான விவரங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மாகாண கல்விப் பணிப்பாளருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களில் கணிதம் மற்றும் விஞ்ஞானபாடங்களைக்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பரீட்சை நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத் தில் நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டிருந்தது தெரிந்ததே. (அ- 11)

# சிலாபத்தில் 5 தமிழர்கள் கைது

கொழும்பு, ஏப்ரல் 25

சிலாபம், வட்டக்குளிப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடத்தப்பட்ட தேடுதலின்போது சந்தேகத்தின்பேரில் 5 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் பெண்கள் ஆவர். இவர்கள் கிளிநொச்சி, மன்னார் மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# இழப்புகள் ஏற்பட்டாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1996இல் விடுதலைப் புலிகள் இராணுவ முகாமொன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலில் 1,200 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை போன்ற மோசமான சமர்களும் நடைபெற்றிருக்கின்றன.

**பயங்கரவாதத்துக்கு வருட இறுதிக்குள் முடிவு காணப்படும்**

1999இல் ஐந்து நாள்ளகளுக்குள் 10 இராணுவ முகாம்கள் வீழ்ந்துள்ளமை போன்ற தோல்வியல்ல இது. இது பாரியதோல்வியல்ல. இவ்வருடத்திற்குள் பயங்கரவாதத்திற்கு முடிவு காணும் இராணுவத்தின் நடவடிக்கை தொடரும்.

இதேவேளை, புதன்கிழமை இடம்பெற்ற மோதல்களில் 43 கொல்லப்பட்டுள்ளதுடன் 33 படையினர் காணாமல் போயுள்ளனர் என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. ஊடக மத்திய நிலையம் முகமாலைச் சமர் குறித்து மேலும்தெரிவித்ததாவது: முகமாலை, கிளாலி பகுதிகளில் தேடுதல் நடைபெற்றதாகவும் தெரிவித்துள்ள பாதுகாப்பு மத்திய நிலையம் மோதலில் 120 படையினர் காயமடைந்ததாகவும் கடுங்காயங்களுக்கு உள்ளானவர்கள் விமானம் மூலம் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டு தேசிய மருத்துவமனை மற்றும் ஸ்ரீஜயவர்த்தனபுர மற்றும் தள மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை அதிகாலை காயமடைந்த, கொல்லப்பட்ட புலிகளை ஏற்றியபடி கிளிநொச்சிக்கும் முல்லைத்தீவுக்கும் வாகனங்கள் சென்றதாகவும் ஏழு மணித்தியாலங்களாகப் பொதுமக்களின் நடமாட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகளுக்குத் தலைமை தாங்கிய அதன் 15 மூத்த உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குத் தீபன், முகுந்தன் என்ற இரு மூத்த உறுப்பினர்கள் தலைமை தாங்கினர் என்றும் அதேவேளை, தாக்குதல் அணிகளுக்கு ஜெரி, குமணன் மற்றும் குட்டி ஆகியோர் தலைமை வகித்தனர் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# முகமாலைச் சம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர்ச்சாலைகளில் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என பொறளை மலர்ச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என அறிய முடிகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடும் சமரில் 33 படையினர் காணாமல் போயுள்ளனர் எனவும் இராணுவத் தரப்பு அறிவித்திருக்கின்றது. (சி)

# 28 சடலங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களை கிளிநொச்சியில் வைத்து விடுதலைப்புலிகள் செஞ்சிலுவை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

பின்னர் அவை படையினரிடம் கையளிக்கப்படும் பொருட்டு செஞ்சிலுவை அதிகாரிகளால் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (அ-1)

# புலிகளின் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

வெள்ளாங் குளத்தைச் சேர்ந்த நல்லதம்பி முருகேசு (வயது-31), முல்லைத்தீவு உடையார்கட்டைச் சேர்ந்த கோபாலப்பிள்ளை சற்குணநாதன் (வயது-24) ஆகிய இருவருமே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

வெள்ளாங்குளம் பகுதியில் இருந்து கல்விளாங்குளம் பகுதியை நோக்கி விறகு ஏற்றுவதற்காக லொறியில் சென்றவர்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. (சி)

# துரையப்பா விளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தாட்டப்போட்டி ஆரம்பமாகி நடைபெறும்.

இதேவேளை காலை தொடக்கம் மாலை வரை வர்த்தக நிலையங்களின் மலிவு விற்பனைஇடம்பெறவுள்ளன. உணவுப் பொருள்கள் உட்பட பாவனைப் பொருள்கள் விற்பனைக்குவிடப்படும். கலை இரசிகர்கள், விளையாட்டு ஆர்வ லர்கள், பொதுமக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களையும் வருகை தருமாறு அரச அதிபர் அழைத்துள்ளார்.

PERSONAL CLASSES
364, STANLY RD.
(NEAR DMI)
B.A. FINAL பேராதனை
தமிழ் : K.தர்மராஜா
Sat, Sun :- 2.30 - 4 p.m
அரச ஊழியர்களுக்கான
Gr-1, II, III
விசேட சிங்கள வகுப்பு
By.K.கார்த்திகேய
நாளை ஆரம்பம்
26.04.2008
காலை 10 மணி.

# மரண அறிவித்தல்

## கந்தையா தங்கம்மா



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கம்மா நேற்று (24.04.2008) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லர்-பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்புமகளும் காலஞ்சென்ற பெரியதம்பி-நாகம்மா தம்பதியினரின் மருமகளும் இரத்தினபூபாலன் (ஓய்வு பெற்ற அதிபர், மன்னார்), வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் (இணுவில்), காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் அருட்சோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பிமுத்து, அன்னம்மா, நாகம்மா, வல்லிபுரம் மற்றும் பூமணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.04.2008) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு.

தகவல்:
Dr.பாலசுப்பிரமணியம்,
இரத்தினபூபாலன் (பெரியண்ணை.)

IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
BIT
Semester II
BIT கற்கைநெறிக்கான Semester II இற்கான விரிவுரைகள் எதிர்வரும் 26.04.2008 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன

அறிவித்தல்
இன்று முதல் V.S.P நல்லெண்ணை சில்லறை விலை ரூபா 600/= ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் அறியத்தருகிறோம்.
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org